www.padippakam.com

# சிந்தனை

தை - மாசி

☆ ☆ ☆

1992





உள்ளே:

- எட்மன்ட் சமரக்கொடி
- பேச்சுவார்த்தை!
- ருஷ்யாவில் நடந்தது என்ன?
- இலக்கியத்தில் இந்திய வம்சாவழியினர் பங்களிப்பு.
- தோழர். அண்ணாமலை
- இடதுசாரிப் பாரம்பரியம்
- மனநோயாளிகள்

1/92

# நாங்களும் மனிதர்கள்தான்



ஓய்வின் போது ஆடவர் கூடி
பற்பல விடயங்கள் மகிழ்வுடன் பேசுவர்
அரசியலெனவும் அபிவிருத்தியெனவும்
தொழிற்சாலைகள் பற்றியும்
பொருளாதாரம்பறிறியும்
பணத்துடன் சுகபோகங்கள் பற்றியும்
இன்னும் சங்கம் மற்றும் முதலாளிகள்
பற்றியும்
என்று பற்பல விடயங்களை அவர்கள் பேசுவர்
இவர்களின் பேச்சில்
இலாபமும் வரும் இழப்பும் வரும்
யுத்தம் தொடக்கம் அமைதி வரைக்கும்
உலகிலுள்ள பிரச்சனை சகலதும்
கருத்துகள் சொல்வார்
இவைபற்றியெல்லாம் பேசும் இவர்கள்
பெண்கள் பிரச்சனைபற்றி
பேசுவதுண்டோ?

*   *   *   *

நாங்களும் முழுநாள் வேலை செய்கிறோம்
ஓய்வே இல்லை
யாரும் கவனிக்கா விடயங்களாக
எங்கள் சம்பளமும் எங்கள் மகிழ்வும்.
கணவன்களினதும் முதலாளிகளினதும்
"தொழிலகங்களில்" எங்கள் சீவியம்.
எங்களிற்காய் குரல் கொடுக்க
எங்களின் இழப்புகள் பற்றிப் பேச
தொழிற்சங்கங்கள் எதுவுமிங்கில்லை.
நாங்கள் சமைத்த உணவை உண்டும்
நாங்கள் செய்யும் வேலையைப் பார்க்கவும்
எப்போதும் விருப்பமாய் இருப்பார்கள்
ஆண்கள்.

கணவனின் பசியைக் காதலுடனும்
கவனமுடனும் தீர்க்க வேண்டியது
பெண்கள் தான்.
இல்லையென்றால்
கோபந்தான் கொள்வான் ஆண்.
ஒதுக்கினர் அவர்கள்.
ஆண்களின் சுகத்தினில்பெண்கள் கருவிகள்.
அச்சந்தனில்தான் பெண்களின்
வாழ்வினிலும்

"குடும்பத்தலைவர்களாய்" மெச்சப்படுவர்
ஆண்கள்.
அதுசரி
தான் செய்யும் கடமைக்காகவும்
காதலுக்காகவும்
இந்தப் பெண்கள் எதுவும் பெறுகிறார்களா?
ஏனில்லை?
ஒவ்வொரு வருடமும்
கிடைக்கிறது அவளுக்கொரு
உயிருள்ள பொம்மை.

*   *   *   *

ஏ பெண்களே
ஆண்களின் பாசையில் பார்வையில்
மூடர்களே
இன்னும் எவ்வளவு காலம்
தாமே உயர்வென்கின்ற
ஆண்களின் சூதாட்ட விடுதிகளில்
உங்களின் காத்திருப்புக்கள்.

ஆண்களிற்கு நாம் சரிசமனென்பதை
நேருக்கு நேரே சொல்லிட எழுவீர்.
நாங்கள் மனித ஜீவிகளென்பதையும்
அவர்களிடம் சொல்வீர்.
எங்களின் உரிமைபோல்
எங்களின் வெற்றியையும்
எமதெனக் கொள்விர்.

## We are also human beings!

When men get together at leisure.
They talk about various things with
pleasure.
Politics, development and factories,
Economics, money and luxuries!
Workers, payments, trade unions and
bosses,
They also talk about gains and losses,
About wars and peace and latest news,
Problems in the world, and their views.
But do they ever speak, of the
problems of women?

We also work all day without leisure,
Nobody cares about our pay or pleasure!
We live in a "factory" where husbands
are bosses!
No trade unions to defend us, or talk
of our loses
Men are always eager to look,
At the work we do, and the food we
cook!
Women must serve the husbands hungry!
With love and care, Oh! otherwise they
are angry!
Women are always considered as fools
As men fancy.... they are used as tools!
Although women live in fear.....
Men! the "breadwinners" are blessed
with cheer.
For all the love and duties done,
Wont the women get anything in
return?
Understanding, love, or anything at all.....
Why not? every year she gets a living
doll!

*   *   *   *   *   *   *

Oh you women, the so called fools!
How long you wait in gambling pools,
With men who think, only they are
great.....
We are equal to men, We must tell
them straight
Come! tell them that we are human
beings!
We shall fight for our rights and win
our themes.

- MALLIKA

www.padippakam.com

# சிந்தனை



ஆரம்பம் 1985

**சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.**

**1/92**

ஆறு இதழ்களுக்கான சந்தா 20 டி.எம்

தொடர்புகளுக்கு:

**SINTHANAI**
**Haussmannstr.107,**
**7000 STUTTGART 1**
**GERMANY**

44 வருட சுதந்திரம்!

அது நாட்டு மக்களுக்கு தந்ததுதான் என்ன?

நாடு சாதித்ததுதான் என்ன?

எல்லாம் பூஜ்ஜியம்தான்.

உள்ளதை உண்டு, உடுத்து வாழ்ந்த மக்கள் இன்று சர்வதேச பிச்சைக்காரர்களாக மாறி விட்டார்கள். ஒவ்வொரு பிறக்கும் குழந்தையும் சர்வதேச வங்கிக்கு கடனாளியாகவே பிறக்கிறதாம்!

உச்ச விலை உணவும் உடையும் சாதாரண மக்களுக்கு எட்டாதவையாகவே இருக்கின்றன. படிப்பறிவு என்பதற்கும் தொழில் வாய்ப்புக்கும் எந்தவித சம்பந்தமுமே இருந்ததில்லை. குடும்ப உறவு, இலஞ்சம் - இவைதான் தொழில்களை நிர்ணயித்தன. வேலையில்லாப் பட்டாளம்? அதுக்குத்தான் பட்டாளம் இருக்குது, போய்ச் சேர்ந்து சாவதற்கு!

நாட்டின் சாதனையோ நாறிக் கிடக்கிறது.

ஆள்கடத்தல், சுட்டெரித்தல், சிறை, சித்திரவதை - இவை எல்லாவற்றிலுமே உலகசாதனை படைத்து விட்டது எமது நாடு. ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையிலேயே முதல் இடம் எங்கள் நாட்டிற்குத்தான்!

சொந்த நாட்டிலேயே ஒரு முடிவில்லாத யுத்தத்தைத் தொடருகிறோம். நாட்டுமக்கள் உலக நாடுகள் எங்கும் வேண்டாத, முகமில்லாத அகதிகளாய் அலைகிறார்கள்.

மக்களோ பதுங்கு குழிகளுக்குள், பட்டினி முகாம்களில்....

தமிழ் மக்களின் நிலைமைகளோ, இதில் இரட்டிப்பான அனுபவங்கள்.

அவர்களுக்காகப் போராடப் புறப்பட்ட இயக்கங்கள்...???

தமிழ் பழம் சொல் ஒன்று உண்டு.

"வேலிக்கு வைத்த முள் தன் காலிலே தைத்தது" என்று.

தமிழ் மக்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் நிலையும் அதுதான். "பிச்சை வேண்டாம், நாயைப் பிடி" என்று சொல்லுகிற உரிமைகளைத்தானும் இழந்த நிலமைகளில் வாழுகின்றார்கள்.

இந்த விரக்திகரமான சூழ்நிலைமைகளில் தான் நாம் இன்று புது வருடங்களையும், பொங்கல்களையும் கூட எதிர் கொள்ளுகிறோம்.

சாதாராண மனித உணர்வுகளுக்கு, மனித உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் ஒவ்வொருவரும் நாடுபரந்தரீதியில் சர்வதேச ரீதியில் ஒன்றிணைந்து செயலாற்றுவதே - அதற்கான வெகுஜன அமைப்புகள் உருவாவத்றகு உதவுவதே - இன்றைய அடிப்படைத் தேவை என நாம் உணருகின்றோம்.

www.padippakam.com

# ஒரு நேர்மையான அரசியல்வாதியின் மறைவு.



தோழர். எட்மன்ட் சமரக்கொடி

தான் வரித்துக் கொண்ட கொள்கையிலிருந்து இறுதி வரை வழுவாது வாழ்ந்த ஒரு நேர்மையான ஒரு அரசியல் வாதி தோழர் எட்மன்ட் சமரக்கொடி மறைந்துவிட்டார். தோழர் எட்மன்ட் சமரக்கொடியின் அரசியல் வாழ்க்கை, இலங்கை இடதுசாரி வரலாற்றில் அழியாத தடங்களைப் பதித்துள்ளது.

ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சியிலே "சிலோன்" ஒரு "லிட்டில் இங்கிலன்ட்" என்று பெருமை பேசிக் கொண்ட பேடிகள் கொடிகட்டி ஆட்சியாளருக்குப் பந்தம் பிடித்துக் கொண்டிருந்த காலம். அந்தக் காலங்களில் முதலாவது உலகப்போரின் சமாதான நாளை நினைவூட்டும் நவம்பர் 11ம் திகதி அன்று "பொப்பி" மலர்களை விற்று மக்களிடம் பணம்சேர்த்து ஆங்கிலேய இராணுவ வீரர்களின் நிதிக்கு அனுப்பும் வழக்கம் இருந்தது. இந்த பணம் இலங்கையில் எவருக்கும் உதவவில்லை. இந்த ஏகாதிபத்திய அடிவருடி நிகழ்வை எதிர்த்து சூரியகாந்தி மலர்களை மக்களுக்கு விற்று அதனால் பெறும் பணத்தை உளநாட்டிலுள்ளவர்களுக்கு உதவும் இயக்கமொன்றை ஒரு ஏகாதிபத்திய விரோதக் குழுவினர் உருவாக்கினர். இதுவே இலங்கையின் இடதுசாரி வரலாற்றில் "சூரியமல்" இயக்கம் என வர்ணிக்கப்படுகிறது. இப்படி இணைந்த பலர் 1935ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி இலங்கை சமசமாஜக் கட்சியை உருவாக்கினர். தோழர் எட்மன்ட் இந்தக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராக இணைந்து அதன் நடவடிக்கைகளில் ஈடுபடலானார்.

இலங்கை சமசமாஜக் கட்சியினால் உருவாக்கப்பட்ட இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் போராட்டங்களில், முக்கியமாக ஊவாமாகாணத்தில் தொழிலாளர்களின் சார்பில் போராடியும், நீதிமன்றங்களில் வாதாடியும் வந்தார். இதனால் ஆத்திரம் கொண்ட தோட்ட முதலாளிகளும் போலிசாரும் நீதிமன்றத்திலேயே அவர் மீது வன்முறையைப் பாவிக்க முயன்றனர்.

இரண்டாவது உலகப் போர் ஆரம்பித்த பொழுது ஆங்கிலேயர் கலானித்துவ நாடுகளிலிருந்தவர்களை அந்தப் போருக்கு ஆதரவு தரும்படி நெருக்கினர். அடிவருடிகளும் யுத்தத்திற்காக ஏழைகளைச் சுரண்ட ஆதரவு கொடுத்தனர். சமசமாஜவாதிகள் அது ஏகாதிபத்தியவாதிகளின் போர், அவர்கள் தங்கள் சந்தைக்கும் இலாபத்திற்காகவும் நடத்தும் போர் என அதை எதிர்த்தனர். இந்த எதிர்ப்பைச் சகிக்காத அரசாங்கம் சமசமாஜத்தலைவர்களைக் கைது

www.padippakam.com

செய்தது. என்.எம்.பேரேரா, கொல்வின் ஆர் டி சில்வா, பிலிப் குணவர்த்தனா ஆகியோருடன் தோழர் எட்மன்ட் சமரக் கொடியும் 1940 ஜூன் மாதம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 1942 இல் சிறையில் இருந்து தப்பிய மற்றைய தோழர்கள் இந்தியாவிற்குச் செனறனர்ங். ஆனால் தோழர் எட்மன்ட் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டார். இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பின்பு சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கம் ஏற்பட்ட பின்பு நடைபெற்ற முக்கியமான தொழிலாளர் போராட்டங்களில் அவர் ஈடுபட்டார். இவர் தலைமையில் "சவுத் வெஸ்டேர்ற் பஸ் தொழிலாளர்கள்" மாபெரும் உள்ளிருப்புப் போராட்டத்தை நடத்தினார்கள். இப்போராட்டத்திற்கு எதிராக பிரதமராக இருந்த ஜோன் கொத்தலாவல இரவோடிரவாக சட்டமியற்ற வேண்டியேற்பட்டது.

1956ல் தனிச்சிங்கள சட்டம் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி ஆகியவை முயன்ற போது சிங்கள, தமிழ் மொழிகளின் சம அந்தஸ்திற்காக புத்த பிக்குகள், காடையர்களின் கல்லடிகள், பொல்லடிகளுக்கெதிராக போராடினார். தொடர்ந்து சிங்களப் பேரின வாதிகள் தமிழ் மக்களுக்கெதிராக எடுத்த நடவடிக்கைகளை எதிர்த்து எப்போதும் குரல் கொடுத்தார். 1960ல் யாழ்.கச்சேரிக்கெதிராக நடைபெற்ற சத்தியாக்கிரகிகளுக்கெதிராக நடைபெற்ற போலிஸ் நடவடிக்கைகளுக்கெதிராக பாரளுமன்றத்தில் கண்டனக் குரல்கள் எழுப்பினார். ஒடுக்கப்பட்ட மக்களின் மாவிட்டபுர ஆலயப்பிரவேசப் போராட்டத்தில் நேரடியாகக் கலந்து கொண்டார். எங்கெல்லாம் மக்களின் போராட்டங்கள் நடைபெற்றாலும் அவரின் பங்களிப்பு அங்கிருந்தது.

1964ல் சமசமாஜக்கட்சித் தலைமை சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேரத் தீர்மானித்த பொழுது அவர் நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்களுடன் வெளியேறி புரட்சிகர சமசமாஜக்கட்சியை அமைத்தார். தனது இறுதிக் காலம் வரை தனது கொள்கைகளிலிருந்து எள்ளவும் விலகாது வாழ்ந்தார். தோழர் எட்மன்ட் சமரக்கொடி எம் காலத்தில் வாழ்ந்த ஒரு நேர்மையான அரசியல்வாதி.

**- ஐயாறன்**

## அனுபவம்!

*புத்தகங்களிலுள்ள தத்துவஞானத்தைக் கரைத்துக் குடித்த பிறகும் மனிதன் தவறுகள் செய்கிறான். அறிவுப் பொக்கிஷத்தை முழுவதும் சேமித்த பிறகும் அவன் தன் அறியாமையை வெளிப்படுத்துகிறான். இதற்கெல்லாம் காரணம் ஒன்றே ஒன்று தான். ஒரே ஒரு புத்தகத்தைப் படிக்க அடியோடு அவன் மறந்து விடுகிறான்! அந்த புத்தகத்தின் பெயர்: வாழ்கை! தனி மனிதனின் வாழ்க்கையல்ல.*

*எண்ணற்ற மக்களின் இருதய ரத்தத்தினால் எழுதிய புத்தகம் அது! இதிலே சில பக்கங்கள் கிழிந்திருக்கும்; சில பக்கங்கள் தொலைந்து போயிருக்கும்; சில முன்னும் பின்னுமாக இருக்கும்! சில இடங்களில் நாலைந்து தடவை மூல வாக்கியம் அடிபட்டிருக்கும். ஆதலால் உண்மை எது? பொய் எது? என்ற குழப்பம் மனத்திலே தோன்றும். இந்தப் புத்தகத்திலே மலர்களை விட முட்களே அதிகம். தாரகையை விடக் கரியே அதிகம். ஆனால் சிலைக்கும் உயிருள்ள மனிதனுக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் மற்றப் புத்தகங்கக்கும் இந்தப் புத்தகத்துக்கும்!*

*ஆதலால் நான் உன்னிடம் சொல்வது ஒரே விஷயந் தான். கண்ணைத் திறந்து இந்த வாழ்க்கை நூலைப் படி. ஆனால் இதைப் படிக்க நீ வீட்டை விட்டு வெளியே போக வேண்டியிருக்கும். வீட்டில் சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு இந்த நூலைப்படிக்க ஆரம்பித்தால்,புத்தகம் முழுவதும் வெற்றுத் தாளாகத்தான் தென்படும்.*

- வெண்முகில்: காண்டேகர்.



படிப்பகம்

www.padippakam.com

# யாருடன் பேச்சுவார்த்தை ?

– தேவன்

யாழ் குடா நாட்டைச் சூழ இராணுவமும் கடற் படையும் குவிக்கப்பட்டு தாக்குதல் இன்றைக்கோ நாளைக்கோ என்ற நிலையில் இராணுவ நடவடிக்கைகள் இருக்கும் பொழுது, தாக்குதல்கள் ஏற்பட்டால் எதையும் சமாளிப்போம் அல்லது காட்டுக்குள் ஓடிவிடுவோம் என்ற நிலையில் புலிகளும் "தயாராக" நிற்கிறார்கள்! இவர்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்ட அப்பாவிப் பொது மக்கள்தான் செய்வதறியாது துடிக்கின்றார்கள்...

இந்த நிலமைகளில் தொண்டமானின் சமாதானப் பேச்சு வார்த்தையும் பிசுபிசுத்துப் போனதாம்! தொண்டமானின் பேச்சு வார்த்தையினால் உடனடியான தீர்வு ஏற்பட்டிருக்குமென்று சகல பகுதியினரையும், நாட்டின் வரலாற்றையும் அறிந்தவர்கள் நம்பியிருக்க முடியாதுதான், ஆனால் கடலில் தாழப் போகிறவன் ஒரு துரும்பைத்தானும் நம்புவது போல, முடிவில்லாத யுத்த சூழலில், பயங்கரவாதத்தின் பிடியில், பசி பட்டினிகளுடன் போராடிக் கொண்டு "மரணத்தினுள் வாழும்" மக்களுக்கு எந்த வகையிலாவது ஒரு யுத்த நிறுத்தமொன்று ஏற்படுமானால், ஒரு சமூகமான நிலை தோன்றுமானால் அது வரவேற்கப்பட வேண்டியதுதான். அந்த நம்பிக்கை, ஒரு யுத்த நிறுத்மொன்று ஏற்படக்கூடிய, சூழ்நிலை இன்னும் தென்படுவதாக இல்லை.

இதைக் கூட ஏற்படுத்தாவிட்டால், தொண்டமான் சாதிக்கக் கூடியது என்ன ? பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் வைக்கப்பட்ட யோசனைகளை பகிரங்கப்படுத்தி தொண்டமான் புலிகளுடன் அதன் அடிப்படையில் பேசப் போவதாக அறிவித்தார். இந்தியாவிலே தொடர்புகளை இழந்து, யானைஇறவை "கோட்டை"விட்ட புலிகள் குடாநாட்டுக்குள்ளிருந்து வேளியே வருவதற்கு யாருடனாவது பேசத் தயாராய் இருந்தார்கள். தொண்டமான் அரசின் உத்தியபூர்வமான பிரதிநிதியாகவோ அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வுடனோ அங்கு பேசுவதற்குச் செல்லவில்லை. ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியுடன் பதின்மூன்று மாதங்கள் பேசி ஒரு தீர்வு காணாத புலிகள் இந்த வெறும் தொண்டமானிடம் பேசி என்ன தீர்வு காண முற்பட்டார்களோ தெரியவில்லை. ஆனால் ஏற்பட்ட விளைவுகள் விபரீதமானவைகளாகவே இருக்கின்றன. காலாகாலமாக சிங்கள மக்களிடம் கட்டி வளர்க்கப்பட்ட பேரினவாதம்தான் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டது. ஜாதிக சிந்தனையாளர்களும் புத்த பிக்குகளும் இரத்தப் பசியடங்காத சுடலை நரிகள் போல ஊளையிட ஆரம்பித்து விட்டார்கள்.

கடந்த 40 வருடங்களாக சிங்களப் பேரினவாதம் ஒரே பாட்டைத்தான் பாடிக் கொண்டு வருகின்றது. "தமிழர் வந்தேறு குடிகள். அவர்கள் இந்த நாட்டில் உரிமை கேட்கமுடியாது." என்பதுதான் அது.

1949ல் செல்வநாயகம் சமஷ்டி ஆட்சி கோரியபோதும், 1956ல் தமிழுக்கு சிங்களத்துடன் சம அந்தஸ்து கோரிய போதும், 1959ல் பண்டா – செல்வா ஒப்பந்தத்தில் பிரதேச சபைகள் அமைக்கப்பட இருந்த போதும், 1966ல் தமிழுக்கு நியாயமான(!) உரிமை கொடுக்கப்பட இருந்த போதும், சமீபத்தில் மாகாணசபைகள் உருவான போதும், இன்று தொண்டமானின் யோசனை வெளியாகிய போதும் – சிங்களப் பேரினவாதம் ஒரே பல்லவியைத்தான் பாடியுள்ளது. இதற்கு ஆட்சி பீடமேறிய எல்லா அரசியற் கட்சிகளும் தூபம் போட்டுள்ளன.

ஆனால் நாட்டைப்பிரித்தது, இன உறவுகளைச் சீரழித்தது சிங்களப் பேரினவாதம் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த புத்த சிங்களப் பேரினவாதமே மறுபுறத்தில் தமிழ் இனவாதிகளுக்கும் ஊட்டம் கொடுத்து வளர்த்தது. இன்று சகோதர இஸ்லாமியர்களையே துரத்தியடித்து, அதுவும் ஒரு பாசிச "ப்ரங்கின்ஸ்ரையினாக" வளர்ந்துவிட்டது!

இந்த நிலமைகளில் நாட்டின் ஜனாதிபதி "சாது, சாது" என்றவாறு, தொண்டமானின் யோசனைகள் பற்றி மௌனம் அனுஷ்டிக்கின்றார். இன்று நாட்டின் தலையில்லாத முண்டங்களுக்கு காரணமாக மட்டுமல்ல, நாட்டின் பிரச்சனைகளுக்கெல்லாமே தலையாக இருப்பதும் அவர்தான். ஆனபடியினால் தொண்டமான் பேச்சு வார்த்தை நடத்த வேண்டியது புலிகளுடனல்ல, எதிர்க் கட்சிகளுடனல்ல, சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியுடன் தான், அவர் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க



படிப்பகம்

வேண்டும். இன்று வடகிழக்கில் உடனடியான யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்த சகல அதிகாரங்கள் கொண்டவராக அவர் மட்டும் தான் இருக்கின்றார். மக்களுக்குள்ள யுத்த பயம், பசி, பிணி ஆகியவை தீர்க்கப்படாமல் எந்த விதமான அர்த்த முள்ள தீர்வுகளும் நடைமுறைப்படுத்தப்பட முடியாது.

தொண்டமானின் யோசனைகள் ஒருபுறமிருக்க, மற்றைய கட்சிகளின் தீர்வுகள் மறுபுறமிருக்க, நாட்டை ஆள அனுமதி பெற்ற அரசாங்கத்தின் தீர்வு என்ன ? தொண்டமானின் தீர்வு மாகாணசபைகளிலும் பார்க்க அதிகமான உரிமைகளை அளிப்பதாக புலிகள் கூட ஒத்துக் கொள்ளுகிறார்களாம்! உண்மைதான், ஏட்டளவில்!! மாகாண சபைகளுக்கான உரிமைகளையே முற்றாகக் கொடுக்காமல் வருடக் கணக்கில் இழுத்தடித்த பிரேமதாசா, அதற்கும் மேலான உரிமைகளைக் கொடுப்பார் என்று தொண்டமான் நம்புகிறாரா? அப்படியானால் அவர் புலிகளிடம் செல்ல முன் பிரேமதாசாவிடம் தன் யோசனைகளுக்கு ஆதரவைப் பெற வேண்டும்.

அன்றிலிருந்து இன்று வரை தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுகளுக்குப் பஞ்சமிருக்கவில்லை. மொழிக்கு சமஅந்தஸ்து, மாவட்டசபை, பிரதேசசபை, மாகாணசபை, தமிழீழம் – இவை எல்லாம் தீர்வுகள். காலத்துக்குக் காலம் தமிழ்த் தலைமைகள் ( அவர்களிடம் எத்தனையோ தவறுகள் இருந்தாலும் ) ஸ்ரீ லங்கா அரசாங்கங்களுடன் சமரசப் பேச்சுக்களுக்கு போகாமலும் இருக்க வில்லை, ஆனால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க மறுத்த அந்த அரசாங்கங்களினால் எந்தவிதத் தீர்வையும் ( தாங்கள் முன்வைத்த தீர்வுகளைக் கூட ) நடைமுறைப் படுத்த முடியவில்லை என்பதுதான் வரலாறு.

ஆனபடியால் இன்று யாழ் குடாநாட்டிற்கு செல்லவிருக்கும் தொண்டமான்கள், மத குருமார்கள் எல்லோரும் செல்ல வேண்டிய இடம் ஜனாதிபதியின் மாளிகைதான்.

## வட்டிக்கடைக்காரர்கள்

மனித உரிமை மீறல்கள் கொலைகளாகவும், கடத்தல்களாகவும் சித்திரவதைகளாகவும் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது இந்த நிமிடம் வரை இலங்கையில்.

இவை இன்று சர்வதேச அளவிலும் தெரியாத விடயங்களல்ல.

ஐரோப்பிய நாடுகளின் தூதுக் குழுவினர் கூட இலங்கைக்கான வெளி நாட்டு நிதியுதவியானது மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்டவை என்றே வலியுறுத்தி வந்துள்ளனர்.

கனடிய மனிதஉரிமை தூதுக்குழுவினரும் அரசபடைகளின் நேரடியான கொலைகளைப்பற்றிப் பகிரங்க அறிக்கை விடுத்துள்ளனர்.

இருந்தாலும்

இலங்கைக்கான சர்வதேச உதவி ( கடன் ) எந்த வகையிலும் குறையவில்லை.

இலங்கைக்கு "உதவி" செய்யும் நாடுகளின் பாரிஸ் மாநாட்டுத் தீர்மானத்தின்படி 825 மில்லியன் டொலர்களை கடனாக இலங்கைக்கு அளிக்க முன் வந்துள்ளனன!

இவையெல்லாம் ஒன்றைத்தான் காட்டுகின்றது.

அதாவது, முதலைக் கொடுத்து வட்டி வாங்குபவர்களுக்கு தங்களிடம் கடன் வாங்குபவர்கள் கொள்ளையடிக்கிறார்களா அல்லது கொலை செய்கிறார்களா என்பதில் அக்கறையிருப்பதில்லை.

அவர்களின் அக்கறையெல்லாம் வட்டியையும் முதலையும் எப்படி, எப்பொழுது திருப்பித் தருகிறார்கள் என்பதில் மட்டும்தான்.

பிரேமதாச அரசு சனங்களைக் கசக்கிப் பிழிந்து தனது கடன்களை அடைக்கும் வரை இவர்கள் கடன் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள்.


மனித நாகரிகத்திற்குச் சவால்விடும் வகையில் உலகெங்கிலும் மனித உரிமை மீறல்கள் வெள்ளிடை மலையாகவுள்ள போதிலும் தம்மை நாகரீக நாடுகளாகக் காட்டிக் கொள்ளும் இந்நாடுகளின் அரசுகள் தமது இலாபங்களிலேயே குறியாகவுள்ளன.

பாலஸ்தீனிய மக்களை அவர்களின் நாட்டை விட்டு விரட்டி அகதிகளாக்கிய நாடான இஸ்ரேல் உலகில் அதிக உதவியைப் பெறுவதும் இந்த வகையில்தான்!

– சந்துஷ்

www.padippakam.com

# அதிகாரத்துவத்தின் புதிய முகங்கள்



1991ன் முடிவில் முதலாளித்துவ தொலைத்தொடர்பு சாதனங்கள் மக்களுக்கு தமது நத்தார் புதுவருடப் பரிசாக சோவியத் யூனியனின் மறைவையும் ஜனாதிபதி கொபர்ச்சோவின் பதவி விலகலையும் அளித்தன. உலக வரை படத்தில் சோவியத் யூனியன் அகற்றறப்பட்டு பல புதிய குடியரசுகள் வரையப்பட்டன. உலக கம்யூனிசத்தின் தாய் நாடு ஒழிக்கப்பட்டு விட்டது! புஷ்ஷிலிருந்து சகல முதலாளித்துவ நாட்டுத் தலைவர்களினதும் பாராட்டுக்களும் மகிழ்ச்சிச் செய்திகளும் எங்கும் பிரசுரமாகின.

மாஜிசோவியத்யூனியனில் நடப்பது என்ன?

1917ல் ருஷ்யாவில் ஏற்பட்ட கம்யூனிசப்புரட்சியின் பின் அந்த நாட்டில் வரலாற்று ரீதியாக ஏற்பட்ட அக புற காரணிகாளினால் சீரழிவுற்று அது ஒரு தனிக்கட்சியின் அதிகாரிகள் சர்வதிகாரம் செலுத்தும் நாடக மாறியது. ( சிந்தனை 1/90ல் "சோசலிசம் செத்துவிடப்போகிறதா?" என்ற கட்டுரையில் இது பற்றி கூடியவிளக்கத்துடன் எழுதியபடியினால் இங்கு அவற்றைத் சுருக்கிக்கொள்கிறேன்.) இந்தக் கட்சி அதிகாரிகள் தமது ஆட்சியை ஸ்திரமாக்குவதற்காக தனிநபர் (ஸ்டாலின்) வழிபாடு, இரகசியப் பொலிஸ் பயங்கரவாதம் ஆகியவற்றை கம்யூனிசம் என்ற பெயரால் நடத்தினார்கள். தொழிலாளர்கள் விவசாயிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட சோவியத் சபைகளின் ஜனநாயக சுதந்திரங்களை பறித்தெடுத்து அவற்றை வெறும் "ஆமாம்" போடும் சபைகளாக்கினார்கள். மூத்த பொல்ஷிவிக் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர், நாடுகடத்தப்பட்டனர். தனிக்கட்சி சர்வதிகாரமும், அதிகாரிகளை பதவியில் வைக்கக் கூடிய கொள்கைகளும் உலகிற்கு கம்யூனிசக் கொள்கைகள் என அறிவிக்கப்பட்டன. இதுதான் சீரழிந்த சோவியத் நாட்டின் வரலாறு. இந்த அதிகாரிகளின் பாரம்பரியத்தில் வந்தவர்கள்தான் இன்றைய ருஷ்ய அரசியலின் கதாநாயகர்கள்.

ஸ்டாலினின் வழிவந்த தலைவர்களில் கொபர்சோவ் சோவியத் யூனியனியனில் அமைப்பு ரீதியான மாற்றங்களைக் கொண்டுவர முயன்றார்.

சோவியத்யூனியனில் உருவாகிய குழப்பகரமான புறக்காரணிகளே அவரை இந்தப் பாதையில் இட்டுச் சென்றன என்று கூறலாம்.

சோவியத் யூனியனின் பொருளாதார வளர்ச்சியானது ஒப்பீட்டளவில் மற்றைய அபிவிருத்தியடைந்த நாடுகளைவிட குறைவாகவே கடந்த சில சகாப்தங்களாக இருந்து வந்தது. இதன் காரணமாக பொருளாதாரத்தை மேலும் நவீனமயப்படுத்துவது, ஏகாதிபத்திய நாடுகளுடனான ராணுவப் போட்டியில் தொடர்ந்து சமநிலை காண்பது, மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பேணுவதுடன் ஆளும் அதிகாரத்துவத்தின் சலுகைகளையும் நலன்களையும் பேணுவது ஆகியவை கடினமான விடயங்களாகிக் கொண்டிருந்தன. இவற்றிற்கான காரணங்களைப்பற்றி மக்கள் அறிய விரும்பி எடுக்கும் நடவடிக்கைகள் அதிகாரிகளின் ஆட்சிக்கு பிரச்சனைகளை உருவாக்கியது. சீரழிந்த பொருளாதாரம் நாட்டில் ஆறு கோடி மக்களை வறுமைக் கோட்டிற்குத் தள்ளியிருந்தது. சுகாதாரம் மற்றும் வாழ்கைத்தரங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தன. மறுபுறத்தில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்புகள் அருகிவந்து கொண்டிருந்தன. தேசிய சிறுபான்மையினர், எழுத்தாளர்கள், இளைஞர்கள் ஆகியோரிடையே எதிர்ப்புக்கள் வளர்ந்து கொண்டிருந்தன.

இந்த நிலமைகள்தான் கொபர்ச்சோவை சீர்திருத்தப்பாதையில் செல்லத் தூண்டின. ஆனால் அதிகாரத்துவத்தின் சலுகைகளும் நலன்களும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமலே, மேலிருந்து இந்த சீர்திருத்தங்களை அவர் செயற்படுத்த முயற்சிகளெடுத்தார். அவருடைய தோல்விகளும் வெற்றிகளும் அவர் முன்னெடுத்த பிரஸ்ரொறிக்கா, கிளாஸ்நொஸ்ட் ஆகியவற்றிலேயே தங்கியிருந்தன.

ஆரம்பத்திலிருந்தே தவறான கணிப்பீடுகளின் அடிப்படையில்



படிப்பகம்

www.padippakam.com

ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார திட்டமான பிரஸ்ரொறிக்கா தோல்வியையே அவருக்குத் தேடிக் கொடுத்தது. இந்தப் பொருளாதாரத்திட்டம் முன்பிருந்த மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தைச் சீர்குலைத்தது, ஆனால் அதற்குப் பதிலாக எந்தவொரு ஸ்திரமான பொருளாதார முறையையும் உருவாக்கவில்லை. கடைசியில் இருந்ததும் கெட்ட நிலையே உருவாகியது.

பிரஸ்ரொறிக்காவின் பொருளாதார தோல்வி 1990ல் ஆபத்தான நிலைமைகளையடைந்தது. பணவீக்கம் அதிகரித்தது. கடைகளிலிருந்து பொருட்கள் மறைந்தன. மக்களுக்குத் தேவையான பொருட்கள் ஒரு சில மாபியாக்குழுக்களினால் "பொதுச்சந்தையில" விற்கப்பட்டன. அவற்றின் விலைகள் மக்களுக்கு எட்டாதவையாக இருந்தன. இந்த நிலைமைகளில் கொபர்சோவிற்கு மக்கள் மத்தியிலிருந்த செல்வாக்கு பூரணமாக அஸ்தமிக்க ஆரம்பித்து விட்டது.

ஏகாதிபத்திய நாடுகளுடனான ராணுவப் போட்டியைத்தவிர்த்து அதற்குப்பதிலாக தொழில் நுட்ப மற்றும் பொருளாதார உதவிகளைப் பெற்று நாட்டின் பொருளாதாரத்தை செப்பனிடுவதே அவரின் வெளிநாட்டுக் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்தது. இதற்காக அவர் எதிர்புரட்சிகரமான பிரதேச ஒப்பந்தங்களையும் செய்ய வேண்டியேற்பட்டது. ஆனால் இது ஒரு புது விடயமல்ல. கடந்தகாலங்களிலும் ஸ்டலினும் அவர் வழி வந்த தலைவர்களும் தமது வெளிநாட்டுத் தேவைகளுக்காக மற்றையநாட்டுப் புரட்சிகளைக் காட்டிக் கொடுத்தது வரலாறு! லத்தீன் அமெரிக்க மற்றும் கியுபாப் புரட்சிகர சக்திளுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் பாதிப்பு பாரதூரமானது.

### கொபர்ச்சோவின் சாதனை

மறுபுறத்தில் கிளாஸ்நொஸ்ட் மூலமாக கொபர்ச்சோவ் சாதித்தவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. ஸ்டாலினால் உருவாக்கப்பட்ட தனிக்கட்சி சர்வதிகாரமும் இரகசியப் பொலிஸ் ஆட்சியும் மக்களின் சாதாரண ஜனநாயக உரிமைகளையெல்லாம் இல்லாமல் செய்திருந்தன. எதிர்கருத்துள்ளவர்களுக்கு எவ்வித சுதந்திரங்களும் அளிக்கப்படவில்லை. அதிகாரத்துவத்துக்குள் இருந்து தோன்றிய வரையறுக்கப்பட்ட திட்டமென்றாலும் கிளாஸ்நொஸ்ட் மூலம் புதிய ஜனநாயக சுதந்திரக் காற்று எங்கும் வீச ஆரம்பித்தது. புதிய அரசியல் கட்சிகள், அரசியல் குழுக்கள், சுதந்திரமான தொழிலாளர் அமைப்புக்கள், சமூக ஸ்தாபனங்கள் ஆகியவை தோன்றின. தனிக்கட்சியின் தணிக்கைக்கு உட்படாத சுதந்திரமான பத்திரிகைகள் அச்சிடப்பட்டன. பொது ஊர்வலங்களில் மக்கள் அச்சமின்றிக் கலந்து கொண்டனர். தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டனர். பல்வேறு அரசியல் கருத்துள்ளவர்கள் அபேட்சகர்களாக போட்டியிட்ட தேர்தல்களில் மக்கள் தாம் விரும்புவர்களுக்கு வாக்களிக்கும் உரிமைகளைப் பெற்றனர்.

இவை எல்லாம் 1920களில் ஸ்டாலின் ஆட்சிக்கு வந்தபின் அற்றுப் போன உரிமைகள். கொபர்சோவின் பெயரை என்றும் நிலைக்க வைக்கும் சாதனை இவை என்று கூறலாம்.

### தேசியவிடுதலைப் போராட்டங்கள்

இந்தப்புதிய சுதந்திரக்காற்று



காலாகாலமாக அடக்கிவைக்கப்பட்டிருந்த எத்தனையோ கோரிக்கைகளை வெளிக் கொண்டு வந்தன. மக்களின் ஊர்வலங்கள், தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள், தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் ஆகியவை ஆங்காங்கே வெடித்தன. தமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி சில குடியரசுகள் சுதந்திரப் பிரகடணங்களைச் செய்தன. இந்த மாற்றங்கள், அவற்றிற்கு காரணமானவரையே உலுக்கியதில் வியப்பில்லை.

மக்கள் சமூகமானது, மகாராணியின் கல்யாண ஊர்வலம்போல் ஒழுங்கு முறையாக முன்னேறுவது அல்ல. மழை நீரினால் நிறைந்த ஓடை போல பள்ளத்தில் விழுந்து, குழியில் தேங்கி, பாறைக்கு ஒதுங்கி, கற்களைப் புரட்டி தனக்குகந்த வழியில் அது முன்னேறும். யாரும் அதற்கு நேரகுசிகை போட முடியாது.

கிளாஸ்நோஸ்டினால் ஏற்பட்ட ஜனநாயக சுதந்திரங்களை கட்டுப்படுத்தும் நோக்கத்துடனேயே கட்சியின் பழமைவாதிகளினால் 1991 ஆகஸ்ட் மாத சதிமுயற்சி முன்னெடுக்கப்பட்டு தோல்வியில் முடிந்தது. அன்று தோற்கடிக்கப்பட்டது

www.padippakam.com


கட்சியிலிருந்த பழமைவாதிகளேயாகும். ஆனால் அதிகாரத்துவத்தின் மறுபகுதியினர் இன்னும் ஆட்சி செய்கின்றார்கள்.

கொபர்ச்சோவ் ஒரு மக்கள் எழிற்சியினாலோ, அல்லது ஏகாதிபத்திய ஆதரவுடன் புதிய ருசிய முதலாளித்துவத்தினாலேயோ அகற்றப்படவில்லை. பொறில் ஜெல்ஸ்டினின் தலைமையில் உள்ள அதிகாரத்துவக் குழுவினாலேயே அவர் அகற்றப்பட்டுள்ளார். ஜல்ஸ்டினும் அதிகாரத்துவத்தின் ஒரு பகுதிதான். கொபர்ச்சோவைப் போலல்லாமல் அவர் கடும் போக்கும், சர்வதிகாரமும் கொண்டவர். அதனாலேயே அவரினால் மக்களுக்கு ஆபத்து அதிகமாகியுள்ளது.

கலாகாலமாக தமது அதிகாரங்களையும் சலுகைகளையும் காப்பாற்றி வந்த அதிகாரத்துவம் புதியமாற்றங்கள் ஊடாகவும் தனது அதிகாரங்களை ஸ்திரப்படுத்துகின்றது. பழைய கம்யூனிஸ்ட் கட்சி இன்று மக்கள் மத்தியில் எடுபடாது என்பதால் புதிய வேஷத்தில், புதிய பதவிகளில் தமது அதிகாரங்களை பாதுகாக்க முயலுகின்றது. ஜல்ஸ்டினுடன் கொபர்ச்சோவின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்த முக்கிய குடியரசுகளின் தலைவர்களை எடுத்துக் கொள்வோம். உக்கரயின் மற்றும் கசாகஸ்ரான் குடியரசின் தலைவர்கள் பழைய ஸ்டலினிச அதிகாரத்துவத்தில் முக்கியமானவர்கள். இன்றும் தமது குடியரசுகளில் அதிகாரத்தை நிலைநாட்ட கே.ஜி.பி. இரகசிய பொலிசில் தங்கியுள்ளனர். ஆகஸ்ட் சதிப்புரட்சியின் போது எந்தப்பக்கமுமில்லாமல் ஊசலாடிக் கொண்டிருந்தவர்கள். தங்கள் குடியரசுகளில் ஏற்பட்ட மக்களின் தேசிய விடுதலை போராட்டத்தை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தேசியத் தலைவர்களாகத் தம்மை மாற்றிக் கொண்டார்கள். தமது அதிகாரங்களைக் காப்பாற்ற ருசிய இனவாதியான ஜல்ஸ்டினுடனும் ஒப்பந்தம் செய்ய கூட அவர்கள் தயங்கவில்லை.

இன்று மாஜி சோவியத் யூனியனில் ஒரு முக்கோணப் போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. இன்னும் அதிகாரத்திலிருக்கும் அதிகாரிகள், முதலாளித்துவத்தை உருவாக்க விரும்பும் சமூகத்தட்டில் உள்ளவர்கள், தொழிலாளமக்கள் பகுதியினர் - இவர்களின் நலன்களுக் கிடையிலான முரண்பாடுகளே இன்றைய நிகழ்வுகளின் அடிப்படைகளாகும்.

இவற்றின் விளைவாக புதிய சதிப்புரட்சிகள் முயற்சிக்கப்படலாம். மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் விலை உயர்வு போன்றவற்றினால் தனது செல்வாக்கை இழந்துவரும் ஜெல்ஸ்டீன் பதவியிழக்கலாம். அவருக்குப் பதிலாக இன்னும் கடும் போக்குக் கொண்ட அதிகாரத்துவத்தைச் சேர்ந்தவர்கள் பதவிக்கு வரலாம். இந்த வகையில் அதிகாரத்துவம் தமது இழந்த



அதிகாரங்களையும் மீளப்பெற்று அடக்குமுறை ஆட்சியை ஏற்படுத்த முயலலாம்.

மறுபுறத்தில் முதலாளித்துவத்தை மீள கட்டி எழுப்ப விரும்பும் சக்திகள் தமது முயற்சியை முன்னெடுக்கலாம். ஆனால் சந்தைப் பொருளாதாரத்தை சகல பகுதிகளிலும் ஏற்படுத்துவது இலகுவான காரியமல்ல. இன்று அரச உடமையாக இருக்கும் உற்பத்தி சாதனங்களை வாங்கி விற்கும் சந்தைக்குக் கொண்டுவருவதானால் அதற்கு 1000 பில்லியன் (1000 x 100 கோடி) டாலர்கள் வேண்டும். அவ்வளவு தொகையான பணம் ருசியாவிலோ அல்லது மேற்கு நாடுகளின் வங்கிகளிலோ இல்லை. ருசியத் தொழிலாளர்களின் உழைப்புச் சக்தி சந்தைப் பொருளாதாரத்துக்குள் மாற்றப்படும் பொழுது நாலு கோடிக்கும் மேலான தொழிலாளர்கள் தமது வேலைகளை இழப்பார்கள். இதை அவர்கள் மௌனமாக ஏற்றுக் கொள்வார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது.


இந்த முக்கோணப் போராட்டங்கள் தொடர்ச்சியான குழப்பநிலமைகளையே உருவாக்கும். மாஜி சோவியத் நாட்டை மேற்கத்தைய நாடுகள் தமது இலாபம் தரும் சந்தையாக, ஒரு மூன்றாமுலக "முதலாளித்துவ" நாடாக்கவே முயலுகின்றன. இந்த முக்கோணப் போராட்டாங்கள் தொடர்ச்சியான குழப்பநிலமைகளையே உருவாக்கும்.

இவற்றினால் அதிகம் பாதிக்கப் படுபவர்கள் தொழிலாள மக்களேயாவார்கள். 1917ல் இருந்ததிலும் பார்க்கப் பெருந் தொகையான தொழிலாளர்கள் இன்று உள்ளனர். இவர்கள் சுதந்திரமாக முன்னெடுக்கும் அரசியல் புரட்சியினாலேயே



படிப்பகம்

www.padippakam.com



அதிகாரத்திலுள்ள அதிகாரிகளைத் தோற்கடிக்க முடியும். ஆனால் இன்று அவ்வாறான ஒரு புரட்சிகர சூழல் அங்கு இல்லை. ஸ்டலினிசத்தில் ஏற்பட்ட விரக்தியினால் தொழிலாளர்களும் மக்களும் அரசியலில் இருந்து அன்னியப்பட்டு இருக்கின்றனர். இன்று புதிதாக தோன்றியிருக்கும் புரட்சிகர சோசலிச மற்றும் ஜனநாயக சக்திகள் பலவீனமானவையாகவே இருக்கின்றன. இந்த சக்திகள் தொழிலாளர்களுடன் இணைந்து செயற்படுவதிலேயே வருங்காலம் தங்கியிருக்கின்றது. இது வரை கிடைத்த ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து விஸ்தரிப்பதற்கும் தனியுடமையாக்கப்படுவதை எதிர்த்து அவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களே வருங்காலத்தில் முக்கியமானவையாக இருக்கும். இப்படியான போராட்டங்களே இறுதியான அரசியல் போராட்டத்திற்கு இட்டுச் செல்லும்.



- பரராஜசிங்கம்

# காணமல்போனவர்கள் நினைவாக

அனேகமாக அவர்கள் இறந்து போனவர்கள்
அவர்கள் "சந்ததி" போலவே
அன்னையின் மடியில் எப்போ
என்பது தெரியும்.
இறைவன் அடியில் எப்போ
என்பது விடையறியா கேள்வியாகும்
இதனிலும் அவர்கள் "சந்ததி" போலவே.

கிராம்சியால் பாசிசத்தில் கூட
தர முமடிந்தது சிறைக்குறிப்பு.
நாஸிகளால் கூட தடுத்திட
முடியவில்லை யூலியஸ் பூசிக்கின்
தூக்குமேடைக் குறிப்புகளை.
தளபதியின் முடிசூடா ஆட்சியில் மட்டும்
மூச்சுக்காற்றும் மூச்சு விட மறுக்கும் அவலம்
அதனால்தான் என்னவோ
பாசிசமும் நாசிசமும் ஈழம் வருகின்றன
டிப்ளோமா பெறுவதற்காய்.

மீசையரும்பா சிறுவர்படை
மிக நேர்த்தியாக தளபதி பின்னே
மணலை கயிறாய் திரிப்பதை கற்றிட.

**பாபு(சுவிஸ்)**

(புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு காணமல்
போனவர்கள் நினைவாக)

நன்றி: தாயகம்

# சொல்லுவார் சொல்லுவாரராயின்....



- கோம்ஸ்

"எமது மக்களை எம்மிடமிருந்து பிரிப்பதற்கு அரசாங்கம் சில யுக்திகளை கையாளுகின்றது. இதனை எமது மக்கள் நன்கு உணர வேண்டும்" என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரும்,அதன் செயற்குழு உறுப்பினருமான சலீம் தெரிவித்துள்ளார்.

– செய்தி.

ஜனாப். சலீம் அவர்களே, தங்கள் சமூகத்தினரை புலிகள் தமிழ் மக்களிடமிருந்து பிரித்து வெளியேற்றி விட்டார்களே. நீங்கள் மட்டும் எப்படி யாழ்ப்பாணத்தில் மிஞ்சியிருக்கிறீர்கள். அல்லது முஸ்லீம்களைப் பிடிக்காவிட்டாலும் புலிகளுக்கு முஸ்லீம் பெயர்கள் ( முன்னைய ரகீம் போல) பிடிக்குமோ?

*

"சமாதானம், கட்டுப்பாடு, சுபீட்சம் இவை எமது மூன்று வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்கு நாங்கள் ஆண்டு தோறும் எம்மை அர்ப்பணித்துக் கொண்டு வருகின்றோம். இவை பற்றி பெருமைமிக்க இந்த எண்கோண மண்டபத்தில் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்கள் ஆணையினை ஆண்டுதோறும் நாங்கள் நினைவுகூருகின்றோம். அந்நினைவு கூருகை பற்றிய மூன்றாவது ஜயந்தி இதுவாகும்".

கண்டியில் ஜனாதிபதியின் பேச்சு.

நினைகூருவது அல்லாது அவற்றை நடைமுறைப்படுத்துவது எமது நோக்கமல்ல. வருடமுழுவதும் மறந்துவிடுவதால் ஒரு நாள் நினைவு கூருகிறோம். அவ்வளவுதான்.

*

"ஜனாதிபதி சாதனை புரிவதை சகிக்காதோரே அவருக்கு எதிராக செயல்பட்டனர்"

அமைச்சர் விஜயபால மென்டிஸ்.

ஆகா, என்ன சாதனை! புத்தர் பேரைச் சொல்லி குண்டு போடுவார். எதிரிக்கும் ஆயுதம் கொடுப்பார். இனபேதமின்றி மக்களை கொல்லுவார். 80,000 பேரை மாயமாக்குவார். தொண்டனை தூதனுப்புவார். தொண்டனைத்தடுக்க புத்த குண்டரை ஏவுவார்.....

பெரியவரின் சாதனை சொல்லி முடியாது!!

*

"இனப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண நாம் ஆவலாக உள்ளோம். ஆனால் இராணுவத்தினர் எந்த வகையிலாவது யாழ். குடா நாட்டைக் கைப்பற்ற முனைந்தாலும் அதனை அனுமதிக்கமாட்டோம்".

புலிஇயக்கம் அறிக்கை.

இராணுவம் யாழ் குடா நாட்டிற்கு வந்தபடியால் பேச்சு வார்த்தைக்கு ஆவலாயுள்ளோம். ஆனால் பிரச்சனைக்கு தீர்வு வரவும் அனுமதியோம். பிரச்சனைதான் எமக்கு உயிர் நாடி.

"சமாதானம் ஏற்படும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும்"
பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்.

புலிகளும் இவர்களும் ஒரே குட்டையில் ஊறிய எருமைகள்தான்.
"அடுத்த யுத்தம் வரை சமாதானம். அடுத்த சமாதானம் வரை யுத்தம் " இவர்களின் மந்திரம் இதுதான்.
*
"'சாவ்' விளையாட்டு விழாவை பிரதமர் முடித்து வைத்தனர்"
செய்தி.

"சாவு" விளையாட்டை முடிக்க விரும்பாத பேய்கள்.
*
"பொருளாதாரத் தடையை நீக்கு!
க.பொ..த. உயர்தரப்பீட்சையை நடத்து"
யாழ். பல்கலைக்கழக மாணவர் ஊர்வலம்.

"கடத்தப்பட்ட பல்கலைக்களக மாணவர்களை விடுதலை செய்" என்ற கோஷத்தையும் சேர்த்து எழுதியிருந்தால் இவர்களின் கதி என்னவாக இருந்திருக்கும்?

*
"தன்னாட்சி உரிமையை உலகம் அங்கிகரிக்கத் தயங்குகிறது."
அன்டன் பாலசிங்கம்.

கிணற்றிற்குள் இருக்கும் தவளைக்கு உலக நடப்புத் தெரியாது போலும்.
சமீபகாலத்தில், தன்னாட்சி உரிமையை உலக நாடுகள் அங்கீகரித்து எத்தனையோ புதிய குடியரசுகள் உலகப் படத்தில் உருவாகியுள்ளனவே!
ஆனால் தனிநபர் வழிபாடும், தனிக் கட்சி சர்வதிகாரங்களும் இன்று சரிந்து நொருங்கிவிட்டது இவருக்குத் தெரியாது போலும்.
*
கடந்த ஆண்டு படைகளின் தரப்பில் 1111 பேர் மரணம். 4274 தீவிரவாதிகளும் பலி.
செய்திகள்.

பொதுமக்கள் தொகை பற்றி யாரும் அலட்டிக் கொள்ளவில்லை. தீவிரவாதிகளின் பட்டியலில் பொதுமக்கள் எத்தனை பேர்?

*
"புலிகள் யோசனையை முன்வைத்தால் பரிசீலிப்போம்"
– மல்வத்தை தேரர் கூறியதாக குருமார் குழுவினர் தகவல்.

இலங்கையின் அரசியலில் தலையிட்டு அதைக் குட்டிசுவராக்கிய குருமார்கள் இன்னும் தமது குழப்பல் நாடகங்களை விட்டபாடில்லை.

www.padippakam.com

# இலங்கை தமிழ் இலக்கியத்தில்...

# இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பு



- அந்தனி ஜீவா

இலங்கையும் இந்தியாவும் வெகு நெருக்கமான உறவுகளைக்கொண்ட அண்டை நாடுகள். இதனால் இலங்கையின் அரசியல் பொருளாதார கலைஇலக்கிய முயற்சிகளில் இந்திய செல்வாக்கு இருப்பது தவிர்க்க முடியாததே. இலங்கையின் தமிழ், சிங்கள, ஆங்கில இலக்கியங்கள் மூன்றிலும் இச் செல்வாக்கை கண்டு கொள்ள முடியும். இச் செல்வாக்கு இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்து வந்த இந்திய வம்சாவளியினரின் இலக்கிய முயற்சிகளில் எவ்விதம் பாதித்துள்ளது. எத்தகைய வளர்ச்சிக்கு அடிகோலியது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின்நோக்கமாகும்.

இலங்கையும் இந்தியாவும் பிரித்தானிய குடியேற்ற நாடுகளாக இருந்த காலம் வரை இந்தியாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகமாயிருந்தது.

இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணம் தமிழர் செறிந்து வாழும் பிரதேசம். இந்தியாவில் தென்கோடியில் செறிந்து வாழ்ந்த தமிழர்கள் - இவர்களுக்கு இடையில் கடல் பிரித்தாலும் மிக அண்மையில் வாழ்ந்த அண்டை நாட்டவராவார். எனவேதான் இந்தியாவைத் தாயகமாகக் கருதும் பழக்கம் மிகச் சமீப காலம் வரை இலங்கையிலிருந்தது. கலாயோகி ஆனந்தகுமார சுவாமி போன்றவர்கள் ஐரோப்பிய நாடுகளை விட இந்தியாவுடனேயே இலங்கை தனது தொடர்பை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். இலங்கைச் சமூக சீர்திருத்த சபையின் 1907-ம் ஆண்டு கூட்டத் தலைமையுரையில் இதனை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்தியாவின் தென்கோடித் தமிழர்கள் பெருந்தோட்ட முயற்சிகளில் ஈடுபடுவதற்காக இங்கு அழைத்து வரப்பட்டு ஏராளமாக இலங்கையின் மத்திய மலைநாட்டில் குடியமர்த்தப்பட்டார்கள். இவர்கள் மலையக மக்கள் என்றும் குறிஞ்சிநில மக்கள் என்றும் இன்றும் இனம் காட்டப்படுகிறார்கள். இவர்கள் பற்றியதும், இம்மக்களிடையே தோன்றிய இலக்கிய படைப்பாளிகளின் ஆக்கங்களும் "மலையக இலக்கியம்" என்று குறிக்கப்படுகிறது. இவ்விதம் வரையறுத்துக் குறிக்கப்படுவது இலங்கை தமிழ் இலக்கியமே.

இந்திய மண்ணில் வாழ்ந்து பழகிய இம்மக்கள் இலங்கையில் குடியேறிய பின்னர் சூழ்நிலை மாற்றத்துக்கு ஏற்ப புதிய புதிய அனுபவங்களைப் பெற்றார்கள். இந்தியமண்ணின் தொடர்பை முற்றாக அறுத்துக் கொள்ளாமல், அத் தொடர்பை குடியேறிய புதிய முயற்சிகளுக்கு உதவுகிற விதத்தில் பயன்படுத்திக் கொண்டார்கள். இதுவே இவர்களின் முதற் பங்களிப்பாகும்.

இந்திய வம்சாவளியினரான மலையக மக்கள் இலங்கையில் 160 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கின்றனர். 1824-ம் ஆண்டு 14 குடும்பங்களின் வருகையோடு இவர்களின் குடியேற்றம் இலங்கையில் ஆரம்பமானது. இவர்களின் ஆரம்பகால இலக்கிய வெளிப்பாடுகள் வாய்மொழி இலக்கியமாகவே அமைந்தன.

கிராமிய பாடல்கள், நாட்டார் பாடல்கள், நாடோடிப்பாடல்கள், தோட்டப் பாடல்கள்,கதைப்பாடல்கள் தெம்மாங்குப் பாடல்கள் என்றெல்லாம் இவ்வாய்மொழி இலக்கியம் வகுக்கபட்டும் தொகுக்கபட்டும் இருக்கின்றன. இலங்கையின் ஏனைய பிராந்தியவாய்மொழி இலக்கியம் அம்மக்களின் சமூக வாழ்கை முறைகளையும், பழக்க வழக்கங்களையும் வெளிப்படுத்தி அமைகின்ற போது, இந்த மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் அம்மக்களின் வரலாற்றின் பல நெளிவுசுளிவுகளை வெளிப்படுத்தி இருக்கிறதையும் கண்டு கொள்ளலாம். இது இலங்கை இலக்கியத்துக்கு இந்த மக்களின் இன்னொரு பங்களிப்பாகும்.

எனினும், ஆரம்பகால குடியேற்றமும் அதை ஒட்டிய வாழ்க்கையும் கரடு முரடானதாக இருந்தது. இம்மக்களின் கனவுகளையும், ஆசைகளையும், நிராசைகளையும், நிச்சயமற்ற பாதையை அமைப்பதற்கு உதவின. இலக்கிய மனப்பாங்கு இவர்களிடையே தோன்றுவதற்கு பலகாலம் பிடித்தது. இவ்விதம் தோன்றியபோது மேலும் அது கவிதை வடிவிலேயே அதிகமாக வெளிப்பட்டது. அதற்கு இந்த பாரம்



படிப்பகம்

www.padippakam.com

-பரிமேல காரணம் என்று கூறலாம்.

கடந்த அறுபது ஆண்டுகால இடைவெளியில் பெருந்தோட்ட சமுதாய அமைப்பு முறையில் ஏற்பட்ட மாற்றங்கள், புதிய பொருளாதார உறவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. இப்புதிய உறவுகளை வெளிப்படுத்துவதற்கு வாய்மொழி இலக்கியம் வலுவற்று இருந்தது. புதிய ஆக்க இலக்கிய முயற்சிகள் பிறக்க வேண்டிய சூழ்நிலை உருவானது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் பரிச்சயம் பெற்ற இந்திய வம்சாவளியினர் இத்துறையில் தங்கள் கவனத்தை செலுத்தினர். உண்மையிலேயே இவர்கள் இந்தியாவில் பிறந்து வளந்தவர்கள், இந்தியாவிலேயே கல்வி கற்றவர்கள், இந்திய பண்பாட்டில் ஊறியவர்கள். இலங்கையில் 1930-ல் வீரகேசரியும், 1932-ல் தினகரனும், பின்னர் சுதந்திரனும் செய்திப் பத்திரிகையாக வெளிவரத் தொடங்கியபோது இவர்களில் பலரும் இதில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றனர்.

இலங்கையின் முதல் தமிழ் ஆசிரியரான கோ.நடேசய்யர், பாரதியின் சீடரான வ.ரா, எச்.நெல்லையா, கே.வி.எஸ். வாஸ் நாகலிங்கம், லோகநாதன், வி.கே.பி. நாதன் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இப்பத்திரிகைகளில் நிறைய எழுதிய இந்திய எழுத்தாளர்களின் படைப்புகள் இந்திய வாழ்க்கையை வெளிப்படுத்தின. இலக்கியக் கூட்டங்களுக்கும், அரசியல் நிகழ்ச்சிகளுக்கும் இந்தியத் தலைவர்களின் வருகை அவசியமாகக் கருதப்பட்டது. கடல் கடந்து குடியேறிய எல்லா நாடுகளிலும் மலேயா, பிஜி, மொரிஷியஸ், அந்தமான், தென்னாபிரிக்கா ஆகிய அனைத்திலும் இந்த உண்மையைக் காணலாம்.

ஆரம்ப காலங்களில் இவர்கள் எழுதிய ஆக்க இலக்கிய முயற்சிகளில் மலைப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்களைப் பற்றி குறிப்பிடப்படவில்லை. அந்நேரத்தில் தங்கள் படைப்புகளில் இந்த மக்களின் பிரச்சனைகளை ஓரளவேனும் தொட்டுக் காட்டிய கோ. நடேசய்யர், சிதம்பரநாத பாவலர், எம்.ஏ.அப்பாஸ், டி.எம்.பீர் முகம்மது ஆகியோரை குறிப்பிட்டே ஆக வேண்டும். இவர்களில் கோ. நடேசய்யர் பத்திரிகை தொடர்போடு, இந்த மக்களின் துன்ப துயரங்களிலும் பங்காளியானார். இந்த மக்களுக்காக முதன் முதல் தொழிற்சங்கம் அமைத்தவர். அடிமைகளைப் போல வாழ்ந்த மக்களை தட்டியெழுப்பியவர். பாரதி பாடல்களை துண்டுப்பிரசுரமாக அச்சிட்டு விநியோகித்தார். இவரே மலையக ஆக்க இலக்கியத்தில் முன்னோடியாவார்.

இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் அடுத்த இரண்டு தசாப்தங்களிலும் இலங்கையின் அரசியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மக்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டதால் அரசியல் அனாதைகளாக்கப்பட்டார்கள், பரிதாபமான நிலைக்கு தள்ளப்பட்டார்கள். இந்நிலையின் தாக்கத்தில் உருவான ஓர் இலக்கிய கலைஞனே சி.வி.வேலுப்பிள்ளை. இவர்கள் ஒரு இந்திய வம்சாவளி தமிழர். இந்த மக்களிடையே வாழ்ந்த, அவர்களின் துன்பங்களையும் துயரங்களையும் கவிதைகளின் மூலம் துலாம்பரமாக வெளிப்படுத்தினார். தமிழிலும் எழுத வரப்பட்ட இவரது படைப்புகள் இந்திய வம்சாவளி மக்களின் இன்னல் நிறைந்த வாழ்வை வெளியுலகிற்கு வெளிச்சம் காட்டியது.

அகில உலகின் அனுதாபப் பார்வையும் இம்மக்களை நோக்கி செலுத்தப்பட்டமைக்கு இவரது "In Ceylon's Tea Garden" என்ற கவிதை நூலே மூலகாரணம் என்பது உலகறிந்த உண்மையாகும்.

1963-ல் ஆசிய ஆப்பிரிக்க கவிதைகளின் முதலாந் தொகுப்பு வெளிவந்தபோது இலங்கை, இந்திய, சீனா, கொங்கோ, இந்தோனேஷியா, கொரியா, சூடான், தங்கனிக்கா, ரஷ்யா, வியட்நாம் ஆகிய பத்து நாடுகளைச் சேர்ந்த எழுபது கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றன. இதில் இடம் பெற்ற ஒரே தமிழ் கவிஞரின் கவிதை இந்திய வம்சாவளியினரான சி.வி.வேலுப்பிள்ளையினுடையதாகும்.

இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பில் பெரும் பகுதி இவருடையதே எனலாம். அது மாத்திரமல்ல படைப்பாளிகள் பரம்பரையை வழிநடத்திய பெருமை இவரையே சாரும். பல்கலைக்கழகப் பட்டம் பெறாத எழுத்தாளர்களை





படிப்பகம்

www.padippakam.com

உதாசீனப்படுத்திய விமர்சன உலகில், இவரது ஆளுமை இந்த உதாசீனத்தை விஞ்சி வளர்ந்து நின்றது.

அறுபதுகளில் இந்த மக்களிடையே ஓர் இலக்கிய ஆர்வம் வெறி கொண்டது. கடல்கடந்து நடைபெறும் போட்டிகளில் பங்கேற்று சமுகப் பிரச்சனைகளை வெளிப்படுத்தும் எழுத்துகளை வெளியிட்டு மலையகத்திற்கும் இலங்கை இலக்கியத்திற்கும் பெருமை சேர்த்தனர். தமிழகத்து "கல்கி" யில் வெளியான திருச்செந்துாரனின் உரிமை எங்கே? என்ற சிறுகதை இச்சிறப்பைப் பெற்றது. மலையக மக்களைப் பற்றிய ஆக்க வடிவில் வெளிவந்து பலரின் பார்வைக்கு உள்ளாயிற்று. புனைக்கதை நூல்கள் இலங்கையின் அதியுயர்ந்த சாகித்திய அகடெமி பரிசில்களைப் பெற்றிருக்கிறன.

இந்திய வம்சாவளியினரான கோகிலம் சுப்பையா, சி.வி.வேலுப்பிள்ளை, சிக்சன் ராஜு, தெளிவத்தை ஜோசப் ஆகியோரின் நாவல்கள் நூல் வடிவில் வெளிவந்திருக்கின்றன.

இந்திய வம்சாவளி மக்களைப்பற்றி நந்தி (டாக்டர் சிவஞானசுந்தரம்), தி. ஞானசேகரன், புலோலியூர் சதாசிவா, யோ.பெனடிக்ற்பாலன், கே. ஆர். டேவிற் முதலானோர் தமிழிலும், ராஜாபுரக்டர் ஆங்கிலத்திலும் நாவல் தந்திருக்கின்றனர்.

ஆக்க இலக்கிய முயற்சிக்கு மாத்திரமின்றி மலையக மக்களின் நிர்மாண சிற்பியான கோ. நடேசய்யர் பற்றிய "தேசபக்தன் கோ. நடேசய்யர்" என்ற ஆய்வு நூலை எழுதி 1986-ம் ஆண்டிற்கான சாகித்திய விருதை எழுத்தாளர் சாரல் நாடன் பெற்றுள்ளார்.

மலையக தமிழ் நாவல்களில் குறிப்பிடத்தக்க ஓரம்சம் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் வேறெங்கும் காணமுடியாத அளவில் இந்தியத் தமிழரின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்ற தொழிற்சங்க நடவடிக்கைகளாகும். இந்திய வம்சாவளித் தமிழரின் சிறப்பான குணாம்சமாக எண்ணப்படும் அளவுக்கு இந்த நடவடிக்கைகள் எல்லா நாவல்களிலும் குறிக்கப்படுகின்றன. இன்று நாட்டு அரசு அவர்களின் தோட்டத் தொழிலுக்கு ஒரு முதலாளியாக மாறிவிட்டிருக்கின்றது. குடியுரிமை இழந்த இந்த மக்களுக்கு இந்த நிலையில் தொழிற்சங்க நடவடிக்கைகள் அர்த்த முள்ளதாக ஆகிவிடுகின்றன. இந்த நாவல்கள் எல்லாவற்றிலும் தொழிற்சங்க நடவடிக்கைகள் பேசப்படுவதன் காரணம் அதுவே எனலாம்.

இந்த நடவடிக்கைகள் பல்கிப் பெருகி தேசிய உணர்வையும் வர்க்க உணர்வையும் வளர்த்தெடுக்கும் நிலைக்கு வரும் போது மொழி இனம் கடந்த தொழிலாளர் உலகம் உருவாகிறது.

நந்தியின் "மலைக்கொழுந்து" நாவலில் வள்ளி என்ற தமிழ்ப் பெண் எதிர் வீரசிங்க என்ற சிங்கள வாலிபனை காதலிப்பதையும், தி. ஞானசேகரனின் "குருதிமலை"யில் செந்தாமரையைக் காதலித்துப் பியசேனா மணப்பதையும் காணலாம்." இனி படமாட்டேன்" என்ற சி. வி. வேலுப்பிள்ளையின் நாவலில் இன்னும் ஒரு படி மேலே நின்று தமிழ்த் தாய்க்கும்,சிங்கள தந்தைக்கும் பிறந்த ஒரு வாலிபன் தமிழ்ப் பெண்ணைக் காதலித்து மணம் முடிக்கும் கதை பேசப்படுகிறது.

பிறந்ததிலிருந்து இறக்கும் வரை துயரம் மிகுந்தது இம்மக்களின் வாழ்க்கை. இவர்களைப் பற்றிய இலக்கியங்களில் இதைக் காணலாம். தொடர்ந்து நிச்சயம் இல்லாமை தங்களின் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க இவர்களுக்கு போதிய பலத்தை கொடுக்கவில்லை. எனவே இப்படைப்புகளில் மனிதன் துயரப்படுவதற்கென்றே பிறந்ததாகச் சித்தரிக்கப்படுவதே அதிகமாகவே காணலாம். மனித நேயம் பாடுவதாக அமைந்த எழுத்துக்களே அதிகம்.பிரச்சனைகளைத் தீர்க்கும் மார்க்கமும் காட்டுவதான படைப்புகளை இவர்கள் எழுதவில்லை. அத்தகைய முயற்சிகளில் இவ்விந்திய மக்களைப் பற்றி எழுதிய வடபுலத்து எழுத்தாளர்கள் ஓரளவுக்குச் செய்திருக்கின்றனர். அச்செயலில் அவர்கள் இம்மக்களைப் புரிந்து கொண்ட அளவுக்கு வெற்றிபெற்றிருக்கின்றனர். ஆனால் அவைகள் யதார்த்தத்தை மீறிய கற்பனைக் கதைகளாக உருவெடுக்கும் அளவுக்கு நீண்டு விடுகின்றன.

விமர்சன வட்டத்தின் மீறிய செல்வாக்கு வடபுலத்து எழுத்துக்களை வழிநடத்தி வந்திருக்கின்றது. எனவே இது தவிர்க்க முடியாதது. இதிலும் இந்திய வம்சாவளித் தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் வேறுபட்டு நின்று தம்பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள்.


மலையக இலக்கியம் விமர்சன கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருக்கவில்லை. முறையான பட்டப்படிப்பு இல்லை என்ற காரணம் காட்டி இவர்களை விமர்சகர்கள் ஒதுக்க முனைந்த பொழுது, அது வேறு சுதந்திர போக்கில் அவர்கள் வளர்வதற்கு வழிவகுத்தது.

"இலங்கையின் தமிழ் இலக்கியத்திற்கு புதிய ரத்தம் பாய்ச்சுவது மலையக இலக்கியமே" என்று பேராசிரியர் க. கைலாசபதி கூறியது இதனாலேயாகும்.



படிப்பகம்

## தோழர் அண்ணாமலை ஒரு மறக்க முடியாத புரட்சிகரப் போராளி.



தோழர்.ஏ.கே.அண்ணாமலை

தோழர் அண்ணாமலை மறைந்து 3வருடங்கள் ஆகி விட்டது. அவர் விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே. இந்த நாட்டில் குறிப்பாக இனரீதியில் அழித்தொழிக்கப்பட்டடு வரும் தமிழ் பேசும் மக்கள் சார்பிலும் பொதுவாக அடக்கி ஒடுக்கப்படும் அனைத்து தொழிலாளார்கள். விவசாயிகள், மீனவர்கள், இளைஞர்கள், மாணவர்கள் ஆகிய பிரிவினர் சார்பிலும் இதயசுத்தியுடன் முழுமூச்சாக இறுதி வரை போராடி வந்தார்.

அண்ணா யாழ். மாவட்டத்தில் பழைமை பேணும் பண்ணாகத்தில்பிறந்து வளர்ந்தவராயினும் அவரோடு கூட புரட்சிகர சிந்தனைகளும் பிறந்தன என்பதையே அவருடைய பிந்திய அரசியல் வாழ்க்கை காட்டி நிற்கிறது. மாணவராயிருந்த காலத்திலேயே மாணவர்களின் உரிமைகளுக்காக போராட ஆரம்பித்த அவர் காலக்கிரமத்தில் பலவேறு சமூக அநீதிகளுக்கும் சாதிக் கொடுமைகளுக்கும் எதிராகப் போராடினர். எனவே, முற்போக்கு சிந்தனையாளனாக வளர்ச்சி பெற்று வந்த அவர் இயற்கையாகவே இடதுசாரி இயக்கத்தின் பால் ஈர்க்கப்பட்டார். சிறிது காலமாக லங்கா சமசமாஜக்கட்சியில் இணைந்து செயலாற்றி வந்தார். 1960களில் அக்கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டாட்சி நடத்த தலைப்பட்டதை அடுத்து அவர் அதிருப்தி கொண்டிருந்தார். காலப்போக்கில் அவர் அதே நிலைப்பாட்டைக் கொண்டிருந்த கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன, வாசுதேவ நாணாயக்கார, ரோனி அந்தோனிப்பிள்ளை ஆகியோருடன் இணைந்து 1977ல் அமைக்கப்பட்ட நவசமசமாஜ கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர்களுள் ஒருவராக விளங்கினார். கட்சியின் அரசியல் குழு உறுப்பினராகவும், தேசிய இனப்பிரச்சினைக் குழுவின் செயலாளராகவும் இறுதி வரை செயலாற்றி வந்தார்.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரை அவர்களின் சுயநிர்ணய உரிமை.ஏற்றுக் கொள்ளப்பட்ட வேண்டும், வடக்கு கிழக்கு அவர்களின் தாயகமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், அவர்களின் பாதுகாப்புக்கென தனியான படைப்பிரிவு உருவாக்கப்பட வேண்டும் எனப்படும் கட்சியின் நிலைப்பாட்டை முன் வைத்து உறுதியாகப் போராடினார். சட்டதரணியாகிய அவர் அத்தொழிலையே முற்றாக ஒதுக்கி விட்டு முழுநேர அரசியல் ஊழியனாக முற்று முழுதாக தன்னை அர்ப்பணித்தார். முதலாளித்துவ ஆட்சி முறையில் அனைத்து உழைக்கும் மக்கள் மீதும் சிறுபான்மை இனங்கள் மீதும் சுரண்டலும் அடக்கு முறையும் எப்போதும் இருந்து உருவதனால் இந்த நாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் அடக்கியொடுக்கப்படும் ஏனைய அனைத்து பிரிவினருடனும் இணைந்து முதலாளித்துவ எதிரி மீது பொதுப் போராட்டத்தைத் தொடுப்பதன் மூலம் தமக்கு உரித்தான உரிமைகளுடன் சமத்துவமாக வாழ வழி பிறக்கும் என்பதை அண்ணா எப்போதும் அடித்துக் கூறத் தவறியதில்லை.

சமூதாயப்புரட்சியையும் சர்வதேச வாதத்தையும் பொறுத்த வரை அவருடைய சமூக அரசியல் உறுதிப்பாடு அவரின் அனுபவத்துடனேயே வளர்ச்சி பெற்றது.

அரசியல், வரலாறு, தத்துவம் ஆகிய துறைகளில் நிறையப்படித்தறியும் பழக்கமும், மறுபுறத்தில் இலங்கையிலும் அதே போல் இங்கிலாந்திலும் அவர் எதிர் நோக்க வேண்டியிருந்த கடினமான வாழ்க்கையையும் அவருக்கும் உருக்குப்பலத்தையும் விடாப்பிடியான புரட்சிகர குணாம்சத்தையும் அளித்தது.

அதே நேரத்தில் அவரிடம் மிக அருமையான நட்பியல்புகளும் இரக்க சிந்தையும் நிறைந்திருந்தன. ஆனால் அவர் கடுமையான போர்க் குணம் கொண்டவராகையால் அவரின் மேற்படி சிறப்பியல்புகளை அநேகர்ளுக்கு இலகுவாக இனம் கண்டு கொள்ள முடியவில்லை. மக்களின் பரிதாபம் நிறைந்த அவல நிலையைக்கண்டு அவரின் மனதில் குமுறல்கள் பொங்கி எழுந்தன. இதனால் தான் அவர் வர்க்கப் போராட்டத்தின் மூலமே ஒரு நாகரிக சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற கௌ்கையில் நம்பிக்கை வைத்து அப்போராட்டத்தின் ஊடாகவே அவர் வாழ்ந்தார்.

www.padippakam.com

தனது இலட்சியப் பற்றின் விளைவாக ஏற்படக்கூடிய மரணத்தையோ வேறு விதமான வன்செயலையோ சந்திப்பதற்கு அவர் ஒரு போதும் பயப்பட்டதில்லை. எந்தப் பெரிய சக்தி யாலும் கூட அவரை விட்டுக் கொடுப்பதற்கு நிர்ப்பந்திக்க முடியவில்லை.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் பிரச்சினை அவர் எதிர் நோக்கிய கடினமான சவாலாயிருந்தது. ஆனால் தனது அறிவுக் கூர்மையினூடாக, இந்த நாட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கும் உள்ள தொடர்பை யதார்த்த ரீதியாக நோக்கினார். அது மட்டுமல்லாமல் இது சம்பந்தமாக இந்திய உபகண்டத்தில் உள்ள முற்போக்கு, மற்றும் ஜனநாயக சக்திகளின் மிக கணிசமானளவு தாக்கமும் பங்களிப்பும் அவசியம் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். இக்குறிக்கோளை முன்னெடுப்பதற்காக வடக்கில் ஒரு வெகுஜன இயக்கத்தைக் தட்டியெழுப்பு வதற்கு அவர் முன்னனியில் உழைத்தமை அவரின் இலட்சிய வேட்கைக்கும் அர்ப்பணிப்புக்கும் வரலாற்றுச் சான்றாக அமைகின்றது.

மேலும், அண்ணா ஒரு மாமனிதன். அவர் எப்போதும் மிக அவதானமாகச் செயற்படுவார். ஒரு விடயத்தின் சகல அம்சங்களையும் ஆராயாமல் அவர் எதுவும் செய்வதில்லை. எனவே வெளிப்பார்வைக்கு அவர் ஒரு பழைமைவாதியாகக் கூட காணப்பட்டார். அவருடைய இல்லம் பழைமைவாய்ந்த யாழ்ப்பாண மத்திய தரவக்கத்தின் அரண் போலக் காட்சியளித்தாலும் அதன் பின்னால் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் புரட்சிகர தன்மையை ஒருவர் இலகுவில் காண முடியாது. ஆனால் அவருடைய புத்தக அலுமாரிகளில் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், டிரொட்ஸ்கி, காள் கவுட்ஸ்கி, பிளெக்கானொவ், கனன் கிராம்ஸ்கி, ஹெகல், லுட்விக் பியுவாப்க் இருப்பதைக் காணலாம். ஒரு விசேட பகுதியில் நவீன உளவியல் புத்தகங்கள் இருப்பதையும் காணலாம். அண்ணா எப்போதும் மனிதர்கள் பற்றி படிப்பதுடன் அவர்களின் குணாம்சங்களையும் அவர்களின் பின்னணியுடன் ஒப்பிட்டுப்பார்ப்பார்.

அண்ணா பேசும் போது கேட்டுக் கொண்டிருப்பது மகிழ்ச்சியான விடயம். கட்சியின் மத்திய குழுக்கூட்டங்களில் அவர் பேச எழும் போதுசபை நிறைந்து காணப்படும். யாராவது சற்று வெளியில் சென்றிருந்தால் அண்ணா பேசத் தொடங்கியதும் விரைந்து வந்து தத்தம் ஆசனங்களில் அமர்ந்து விடுவர். வடக்கு கிழக்கு நிலைமை எப்படி என்பதை அறிவதற்கு மட்டுமல்லாமல், அவர் கையாளும் உவமான உவமேயங்களையும் கேட்டு இரசிப்பதற்கு நாம் ஆவல்படுவதுண்டு. அண்ணாவைப் பொறுத்தவரை எந்தவொரு மிகத்துக்ககரமான காரியம் என்பதாலும் கூட அதிலும் நகைச்சுவை காணப்படும். இன்று அவர் பேசக் கூடியவராய் இருந்திருந்தால் தன்னைச் சுட்டதைப் பற்றியும் சுவையாகக் கூறியிருப்பார்.

அண்ணா அடக்கு முறைக்கெதிராகப் போராடிய மிகப் பெரிய தமிழர். இலங்கை இராணுவத்தினர் என்றாலும் சரி, இந்திய இராணுவத்தினர் என்றாலும் சரி அட்டூழியங்கள் மேற் கொள்ளப்பட்ட வேளைகளில் எல்லையில்லாத வகையில் அவரின் ஆத்திரம் பொங்கி எழுந்தது. 1979ல் இலங்கை இராணுவத்தினால் சித்திரவதை செய்து, கொலை செய்யப்பட்டு யாழ்ப்பாண வீதிகளில் இளைஞர்களின் சடலங்கள் வீசப்பட்டிருந்தநாள் முதல் இனங்களுக்கிடையில் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கம் (MIRJE) எனற அமைப்பின் கிளை ஒன்றினை முன்னின்று ஆரம்பித்து அதனூடாகவும் ஓயாது போராடினார். அப்படியிருந்தும் ஏன் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்?

அண்ணாவின் மறைவு முழு இடதுசாரி இயக்கத்துக்கும், அனைத்து அடக்கியொடுக்கப்படும் மக்களுக்கும், குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும் என்பதை அநேகர் அறிவர். அதிலும் இன்று தமிழ் பேசும் மக்கள் வரலாறு காணாத துன்ப துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் அவர் அனப்பரிய பணிகளை ஆற்றியிருப்பார். அவரின் குரல் கல்லறையிலிருந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர் விட்டுச் சென்ற புரட்சிகர பாரம்பரியங்களையும் பணிகளையும் நாம் விடாப்பிடியாகத் தொடருவோம்.

**- வாசுதேவ நாணயக்கார**

## சஞ்சிகை அறிமுகம்

தொடர்புகட்கு.....

UYIRPPU
BM BOX 4002
LONDON
WC1N 3XX



படிப்பகம்

www.padippakam.com

# இடதுசாரிப் பாரம்பரியம்.

1930களில் "சூரியமல்" எனப்படும் இயக்கத்தை முன்னோடியாகக் கொண்டு அமைக்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சி 1950களின் நடுப்பகுதி வரையில் இந்த நாட்டின் கலங்கரை விளக்கமாகவும், தொழிலாளி வர்க்கத்தினதும் மற்றும் பரந்துபட்ட உழைக்கும் மக்களினதும் சிறுபான்மையினத்தினதும் நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்கியது என்பதை யாவரும் அறிவர்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வரலாற்று முக்கியத்துவம் வாந்த போராட்டங்களை இடதுசாரி இயக்கமே தலைமை தாங்கி நடத்தியது.குறிப்பாக பெருந்தோட்டத் துறையில் லங்கா சமசமாஜக் கட்கி முன்னின்று நடத்திய வீரதீரமான போராட்டங்கள் பெருமைக் குரியவையாகும்.

விசேடமாக முல்ஓயா, வெலச ஆகிய தோட்டங்களில் நடத்தப்பட்ட வீரகாவியம் படைத்த போராட்டங்களும் தொழிலாளி கோவிந்தன் அன்று முல்ஓயா போராட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்டதும் வரலாறாகும்.

1953 இல் நடத்தப்பட்ட மகத்தான ஹர்த்தால் போராட்டமும் இடதுசாரி இயக்கத்தின் தலைமையிலேயே நடத்தப்பட்டது என்பதை யாவரும் அறிவர். அன்று பதவியில் இருந்த டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐ.தே.க.அரசாங்கம் அப்போராட்டத்தை கண்டு கதிகலங்கியது.செய்வதறியாத நிலையில் மந்திரி சபையின் அவசரக் கூட்டத்தைக் கூட பயந்து பதுங்கி கடலுக்குச் சென்று கப்பல் ஒன்றில் நடத்தியது.

1950களில் நடுப்பகுதியில்குறிப்பாக 1956 இல் நடை பெற்ற தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் தலைமையிலான கூட்டணியுடன் லங்கா சமசமாஜக் கட்சிபோட்டி தவிர்ப்பு அடிப்படையிலான ஒப்பந்தம் செய்து கொண்ட நாள் முதல் இந்த நாட்டின் இடதுசாரி இயக்கம். அதற்கு முன்னர் கொண்டிருந்த மதிப்பையும் செல்வாக்கையும் இழக்கத் தொடங்கியது. 1953இல் நடத்தப்பட்ட ஹர்த்தால் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் கண்ணோட்டத்துடன் முன்னெடுக்கப்படாமையால் அது தொடர்ந்து நடத்தக்கூடிய சூழ்நிலை தோன்றிய போதும் அது ஒரு நாளோடு நிறுத்தி வைக்கப்பட்டது. அந்த ஹர்த்தால் மூலம் ஐ.தே.கவுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியினாலும் அதனால் வெளிகொணரப்பட்ட புட்ரச்சிகர சக்திகளாலும் தோற்றுவிக்கப்பட்ட சாதகமான நிலைமையை பண்டாரநாயக்கா தட்டிக் கொண்டார்.

அவர் 1956 இல் தேர்தலில் வெற்றியீட்டி பதவிக்கு வருவதற்கு இது முக்கிய காரணமாகும். தமிழுக்கு சிங்கள மொழியுடன் சம அந்தஸ்த்துக்காகப் போராடி வந்த லங்கா சமசமாஜத் தலைவர்கள், 1956 இல் திரு. பண்டாரநாயக்காவால் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராக, அது நாடு பிளவுபடுவதற்கு வழி வகுக்கும் என்ற மிகக் கடுமையாக பாராளுமன்றத்தில் போராடியும் கூட அச்சட்டம் நிறை வேற்றுப்படுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை.

இத்தகைய அனுபவத்தை இடதுசாரிகள் 1950களில் பெற்றிருந்தும் கூட அவர்கள், அக்கறை உணர்ந்த, முன்னர் பின்பற்றி வந்தபுரட்ச்சிகர பாதையை மீண்டும் தொடர தவறி விட்டனர். மாறாக, அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடனான கூட்டாச்சி உறவு முறையையே வளர்ச்சியடையச் செய்தனர்.1963இல் இந்த நாட்டின் ஒரு ஐக்கிய இடதுசாரி முன்னணி 21 பிரதான அரசியல் பொருளாதார கோரிக்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

அந்த முன்னணி இந்த நாட்டு முற்போக்கு சக்திகளுக்கும் அனைத்து அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்கும் குறிப்பிடத்தக்க அளவு நம்பிக்கையை ஏற்படுத்தியது. துரதில்டவசமாக 1964இல் பலவீனப்பட்டிருந்த ஸ்ரீ.ல.சு.கட்சி அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுப்பதற்காக லங்கா சமசமாஜக் கட்சி அதன் அழைப்பை ஏற்று குழந்தைப் பருவத்திலிருந்து ஐ.இ. முன்னணியை உதறிவிட்டு அன்றைய கூட்டரசாங்கத்தில் இணைந்தது. அக்கட்சியில் இதனை எதிர்த்தவர்களில் ஒரு சில தலைவர்கள் உடனடியாக கட்சியிலிருந்து வெளியேறினார்கள்.

இவர்களுநு பாலாதம்பு, எட்மன் சமரக்கொடி, காராளசிங்கம் ஆகியோர் முக்கிய தலைவர்களாவர். காராளசிங்கம் சிறிது இடைவெளியின் பின் மீண்டும் ல.ச.ச. கட்சியில் சோந்து கொண்டார். மறுபுறத்தில், வேறு சில, குறிப்பாக



படிப்பகம்

www.padippakam.com

இனம், தலைவர்கள் அவ்வாறு திடீரென வெளியேறாமல் உட்கட்சிப் போராட்டம் நடத்தி தமது நிலைப்பாட்டினை மேலோங்கச் செய்ய முயன்றனர்.

கட்சிக்கள் "வாம்" என்றழைக்கப்படும் இடதுபிரிவை அமைத்து தமது கருத்துக்களை முன் வைத்து தொடர்ந்து போராடினர். கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, எட்வின் கொத்தலாவலை, வாசுதேவ நாணயக்கார, ரோனி அநிதோனிப்பிள்ளை, டாட்டர் அரசரத்தினம், ஒஸ்வின் பெர்ணாண்டோ ஆகியோரே இந்தப் பிரிவுக்கு தலைமை தாங்கினர்.

தேசிய இனப்பிரச்சினை, கூட்டாச்சிக் கோட்பாடு ஆகியவை போன்ற விடயங்களின் மீதான சரியான நிலைப்பாட்டிலிருந்து இக்குழுவினர் விட்டுக் கொடுக்க மறுத்ததன் காரணமாக இவர்கள் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

அப்படி வெளியெற்றப்பட்ட போதும் அவர்கள் கடந்த கால உட்கட்சிப் போராட்டத்தினூடாக திரட்டிய சக்திகளையும் ஒன்றினைத்து முன்னேறியதன் காரானமாகவே நவசமசமாஜக் கட்சி 1977இல் ஆரம்பிக்கப்பட்டது.

முதலாளித்துவ ஆட்சகளின் கீழ் கடந்த ஆண்டுகளாக மிலேசத்தனமான அடக்கு முறைகளும் அழித்தொழிப்புகளும் இடம்பெற்று வந்தமைக்கும், குறிப்பாக வட கிழக்கில் கடந்த 10 வருடங்களாக இரத்த ஆறு ஓடுவதற்கும் பழைய இடதுசாரிகளின் தவறுகளே காரணமாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

முதலாளித்துவ ஆட்சியாளர்களுடன் கூட்டு சேர்ந்ததன் காரணமாக மக்கள் அவர்களில் நம்பிக்கை இழந்தனர். இடது சாரிகளே தமது உரிமைகளுக்காக உறுதியாகப் போராடுபவர்கள் என எதிர்பார்த்திருந்த தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையையும் இழந்தனர். மறுபுறத்தில் தமிழ், முஸ்லிம் தலைவர்கள் பெரும்பாலும் சிங்கள முதலாளித்துவ தலைவர்களுடன் ஒட்டி உறவாடினார்களே தவிர இடதுசாரிகளோடு கைகோர்த்து தமிழ்பேசும் உரிமைப் போராட்டத்தை, அனைத்து அடக்கி ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களுடன் இனைத்து நடத்த முன்வராமையும் இன்றைய நிலைக்கு முக்கிய காரணமாகும்.

நவசமசமாஜக் கட்சியைப் பொறுத்தவரை முதலாளித்துவ கூட்டரசாங்கங்களுடன் இணைதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. தேசிய இனப்பிரச்சினையைப்பொறுத்த அளவில் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையின்அடிப்படையில் அவர்களுக்கு ஆகக் கூடிய அளவு சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட்டு சமத்துவமாக வாழ விடப்பட வேண்டும். அவர்களின் பாதுகாப்புக்காக ஒரு தமிழ்ப்படைப்பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எள்ளளவும் மாற்றமும் கிடையாது.

இந்த அடிப்படையிலேயே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதை நாம் மீண்டும் அடித்துக் கூறுகிறோம். கடந்த காலத்தில் இப்பிரச்சினை தொடர்பாக மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் பயனற்றுப்போயின. இன்று பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் நம்பிக்கை வைத்தவர்களும் ஏமாற்றத்துக்குள்ளாகி கொண்டிருக்கிறார்கள்.

மறுபுத்தில் வேலையில்லாப் பிரச்சனை. விசம்போல ஏறும் விலைவாசி உயர்வுகள், பணவீக்கம் ஆகிய பிரச்சனைகள் காரணமாக மக்கள் மத்தியில் கொந்தழிப்பு நிலை இருந்து வருகிறது. வடக்கு கிழக்கில் யுத்தம் தொடர்கிறது. உலக வங்கியின் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவுகளுக்கு அமைய அரசாங்கத்தினால் தன்யார் மயப்படுத்தல் விலைவாசி உயர்த்துதல் போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகள் நாளொரு வண்ணமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையிலாவது குறிப்பாக இடதுசாரிக் கட்சிகள் கடந்த கால தவறுகளை உணர்ந்து இறுக்கமான ஒரு முன்னணியை அமைக்க வேண்டியது, மேலும் காலம் தாழ்த்தக் கூடிய காரியம் அல்ல என்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

தனியார் மயப்படுத்தலை நிறுத்து, யுத்தத்தை நிறுத்து, அவசரகாலச் சட்டத்தை நீக்கு, சம்பள உயர்வு வழங்கு என்பதை போன்ற கோரிக்கைளை முன் வைத்து இதயசுத்தியாகவும், உறுதியாகவும் விடாப்பிடியாகவும் போராடுவதற்கு இக்கட்சிகள் தயாரென்றால் அனைத்து அடக்கி ஒடுக்கப்படும் மக்களும் அணிதிரள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. தமிழ், முஸ்லிம் தலைவர்களும் இந்த அணியிலேயே இணைய வேண்டும். இ.தொ.கா. தலைவர்கள் கூட தமது நிலையை மீள்பரிசீலனை செய்து இத்தகையதொரு அணியில் திரள்வது தான் அவர்களின் வரலாற்றுக் கடமையாகும். வேறு எந்த வழியிலும் பிரச்சனைகள் தீர்க்கப்படமாட்டா என்பதற்கு வரலாறு போதிய பாடம் புகட்டி விட்டது.

– திருநாவுக்கரசு



படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ விடுதலை இயக்கங்கள் மீதான விமர்சனம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் (ஆயுதப் போராட்டம்) தமிழீழ நாட்டுக் கோரிக்கையை முன் வைத்துத் தொடங்கப் பெற்று பின் இப்போராட்டம் இன்று யாருக்காக? எனும் கேள்வி தமிழ் மக்களிடையே எழுந்துள்ளது. பல கோஷங்களை முன் வைத்துத் தோன்றிய இயக்கங்கள் இன்று குறிக்கோளிலிருந்து விலகியதோடல்லாமல் இனவாத அரசுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு தம்மினத்தையே அழிக்க முற்பட்டமை வேதனைக்குரியவிடயமாகும்.

தமிழர்ஐக்கியவிடுதலைக்கூட்டணியினரின் (TULF) இன, அரசியல் துரோகத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவர்கள் தான் தமிழீழப் பிரிவினை வாதத்தைத் தமது அரசியல் லாபத்திற்காகத் தமிழ்மக்களைத் தூண்டியவர்கள். குறிப்பாக இளைஞர் சக்தியைத் தூண்டி விட்டு நம்மினம் அழிவதற்குக் காரணமான இவர்கள் இன்று அதே இனவாத அரசான (UNP)யிடம் கூட்டணித்தலைவர்களில் ஒருவரான சிவசிதம்பரமும் அவரது கோஷ்டியினரும் தூது சென்று மண்டியிட்டு யாழ் குடா நாட்டு மக்களை அழிக்காத வண்ணம் விடுதலைப் புலிகளுக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டு கோள் விடுத்துள்ளவர். இதிலிருந்து இவர்கள் விடுதலைப் புலிகளை மட்டுமா அல்லது முழுத்தமிழ் மக்களையுமே பழிவாங்க நினைக்கின்றார்? என்பதைத் தமிழ் மக்களே தீர்மானிக்கட்டும். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கட்சி (TULF) என்ற ஒரு கட்சி இனிமேலும் தமிழ் மக்களுக்குத் தேவையா? என்பதையும் தமிழ் மக்களே தீர்மானிக்கட்டும். இவர்களா மக்களின் பாதுகாவலர்கள்?

அடுத்ததாக தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (PLOTE) ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அவ்வியக்கம் நல்ல முன் மாதிரியான அரசியல் திட்டம், இராணுவ அமைப்பு முறை போன்ற விடயங்களைத் தன்னுள்ளடக்கியதாகப் பரிணமித்தது. ஆனால் இவ்வியக்கம் துரதிஷ்டவசமாக பல வித சூழ்நிலைகளால் தன்னைத்தானே அழித்துக் கொண்டது. PLOTE என்ற இயக்கம் இருக்கின்றதா? என்ற கேள்வி கூட பொது மக்களால் எழுப்பப்பட்டது.

இந்நிலையில் இவ்வியக்கத் தலைமைகளில் மாற்றம் ஏற்பட்டு மீண்டும் சிறிதளவு நம்பிக்கை மக்களிடையே தோன்றியது. ஆனால் புதிய அரசியற்தலைவர்களின் அரசியல் அணுகு முறைகள் மீண்டும் அதன் நம்பிக்கையை இழக்கச் செய்து வருகின்றது. நானும் நீண்ட காலமாக PLOTE அங்கத்தவன் என்ற முறையில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன்.PLOTE இயக்கத்தின் அரசியல் கொள்கையை விரும்பித்தான் பல நூற்றுக்கணக்கான மிக இள வயது இளைஞர்கள் இராணுவப் பயிற்சியில் சேர்ந்து மிகக்கடுமையான கஷ்டங்களை அனுபவித்துப் பெற்ற பயிற்சியைத் தமது நாட்டிற்காகத் தொண்டு செய்ய முடியாமல் இறுதியில் பல அந்நிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரிச் சென்றுள்ளார்கள். இன்று இவர்கள் தமது எதிர் காலம் என்னவாகுமோ என்ற ஏக்கத்திலும், மனோ விரக்தியிலும் வாழ்ந்து வருவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது.

இந்நிலையில் புதிய தலைமைகள் நாம் எதிர் பார்த்தது போல் விடுதலைப் புலிகளுடனும், மற்றைய இயக்கத்தலைவர்களுடனும் சுமுக உறவை ஏற்படுத்தி மக்களுக்குத் தன்னம்பிக்கையை ஊட்ட வேண்டியவர்கள் தேவையற்ற விரோதமனப்பான்மையை வளர்த்து வருவதுடன் அரசுடன் சேர்ந்து மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதாகக் கூறுகின்றார்கள். இவர்களின் இவ்வரசியல் அணுகு முறை மிக மிகப் புதுமையானதாகவிருக்கின்றது. இவர்களின் இவ்வணுகு முறையே இனவாத அரசிற்குத் தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்குச் சாதகமாகவும், சந்தர்ப்பமாகவும் அமைந்து விட்டது வேதனைக்குரியவிடயமாகும். விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளால் தான் தமிழ் மக்கள் அழிக்கப்படுகின்றார்கள் என்று கூறும் இவர்களும் மக்களின் அழிவிற்குத் துணைபோய்க் கொண்டிருப்பவர்களே. இவ்விடயத்தை PLOTE இயக்கத்தால் மறுக்க முடியுமா? இக்கருத்துக்களை நான் எழுதுவதால் விடுதலைப்புலிகள் தவறே செய்யாதவர்கள் என்று அவர்களுக்கு வக்காலத்து வாங்குவதாக யாரும் கருத வேண்டாம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (POLTE) வெளிநாட்டுக்கிளைகளாவது அவ்வியக்கத்தின் தலைவர்கள் செய்யும் தவறைச்சுட்டிக் காட்டித் தவறுகளைத் திருத்த வேண்டியவர்கள். குறிப்பாக ஜேர்மன் கிளைப்பொறுப்பாளரும், அவரைச் சார்ந்தவர்களும் "எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல்" பிரசுரங்கள் மூலமும், தொலை பேசிச் செய்தி நிலையத்தினூடாகவும் மனித தர்மத்திக்கப்பாற்பட்ட கருத்துக்களை மனம் போனபடி வெளியிடுகின்றார்கள். இத்தனைக்கும் இவர்கள் இலங்கையின் யுத்த சூழ்நிலைபற்றிச் சரியான அனுபவ மற்றவர்கள்என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அடுத்ததாக இக்கிளையினர் (PLOTE)

தாம் சார்ந்திருக்கும் இயக்கத்தைச் சரியான பாதையில் வளர்க்க விரும்புகின்றார்களா அல்லது திட்டமிட்டு அழிக்க நினைக்கின்றார்களா? என்ற கேள்வி பல கழக ஆதரவாளர்களிடையே எழுந்துள்ள கருத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்விமர்சனத்தை எழுதுகின்றேன். இவ்விமர்சனத்தின் பின்னாவது இவர்கள் சரியான பாதையில் செல்வார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். (PLOTE) இயக்கம் அரசுடன் சேர்ந்து செயல்படுவதை இவர்களைப் போல் ஒரு சிலரே ஆதரிக்கினறார்கள். ஆகவே எல்லோரும் ஆதரிப்பதாகப்பொது மக்கள் தவறாக எண்ண வேண்டாம் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்.

பிற்குறிப்பு

(1)தமிழிழ மக்கள் விடுதலைக் கழகம்(PLOTE) இனிமேலாவது அரசை விட்டு வெளியேறி விடுதலைப்புலிகளுடனும் (LTTE) மற்றைய தமிழியக்கங்களுடனும் ஒன்றினைந்து அரசிற்கெதிராகப் போராட வேண்டும். அல்லது

(2)அரசை விட்டு வெளியேறி யாருடனும் சாராமல் நடுநிலை நிலைவகிப்பது. அல்லது

(3)முற்றாக இயக்கத்தைக் கலைத்து விட்டு மக்களின் பாதுகாவலன் என்று கூறும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திடமே முழுப் பொறுப்பையும் ஒப்படைத்து விடவும். அவர்களின் சரி பிழைகளை மக்களே தீர்மானிக்கட்டும். தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் இனத்துரோகிகள் என்ற அவதூறு எமக்குத் தேவையில்லை.

- குமாரவேல்

## ஒரு குட்டிக் கதை!

அம்பும் வில்லுடன் வேட்டைக்குச் சென்ற ஒரு வேடனின் முன் ஒரு புலி தென்பட்டது. "ஆகா, இந்தப்புலியின் தோலைப் போர்த்துக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் " என்று எண்ணிய வேடன் புலியின் மீது தனது பாணத்தை எய்ய ஆயுத்தமானான்.

இதைக்கண்ட புலி புன்முறுவல் பூத்த முக்துடன் "என்ன வேடா, எதற்காக அம்மையும் வில்லையும், எடுக்கிறாய்? எங்களுக்குள் இருக்கும் பிரச்சனைகளைப் பேசித் தீர்க்க முடியாதா? வா பேசி ஒரு தீர்வுக்கு வருவோம். உனக்கு என்ன வேண்டும்?" என்று அழைத்தது.

புலியின் இந்தப் போக்கினால் வேடன் அசந்து போனான்.


"எனக்கு உன்னுடைய தோல் வேண்டும்" என்றான் வேடன்.

"அது அவ்வளவு பிரச்சனையான விசயமில்லை. என்னுடைய வயிற்றில் ஒன்றுமில்லை. உன்னை அதனுள் போட வேண்டும், அதுதான் என் பிரச்சனை. ஆனால் பரவாய் இல்லை. நாங்கள் இருவரும் இதைப் பேசித் தீர்க்கலாம். வா" என்றது புலி.

இருவரும் நெடுநேரமாக நின்று கொண்டு பேசினார்கள். பின் புற்தரையில் இருந்து கொண்டு பேசினார்கள். இறுதியில் ஒரு தீர்வுக்கு வந்தார்கள். புலியின் முகத்தில் புன்முறுவல் பூத்தது.

புலியின் வயிற்றினுள் வேடன் இருந்தான். அவனைச் சுற்றி புலித்தோல் இருந்தது.

முகிலன்.



## தக்காளியும் முட்டையும்....

ஒரு மூன்றாமுலக நாட்டு அரசியல் தலைவரை நோக்கி கற்களை வீசி எதிர்ப்புத் தெரிவித்த இளைஞனிடம் அந்த நாட்டிற்கு வந்த உல்லாசப் பிரயாணி கூறினார்,

"நீங்கள் நாகரிமாக உங்கள் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும். எங்கள் நாட்டில் அரசியல் வாதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதானால் வேண்டியமட்டும் தக்காளிப்பழங்களாலும் முட்டைகளாலும் எறிவோம்"

"வேண்டியமட்டும் தக்காளிப்பழங்களும் முட்டைகளும் இருந்தால் நாங்கள் ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கப் போகிறோம்" என்றான் அந்த இளைஞன்.

www.padippakam.com

# ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்

கொலைகாரப் புலிகளினால் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு, துணுக்காய் காட்டில் சித்திரவதை அனுபவித்துக் கொண்டிருந்தபோது, புலிகளின் இக்கொடுமைகளை உலகத்திற்கு குறிப்பாக அவர்கள் உத்தமர்களாக, விடுதலை வீரர்களாகக் கருதும் அப்பாவித் தமிழர்களுக்கு அறியத்தர வேண்டும் என பல தடவைகள் எண்ணினேன். இதை என் கடமையாகவும் கருதினேன். புலிகளின் கொடுஞ்சிறையிலிருந்து தப்பி வந்தபின் யாழ்நகரில் தலைமறைவாக இருந்தேன். புலிகளின் கண்ணுக்குள் மண்ணைத்தூவி விட்டு தமிழீழத்திலிருந்து தப்பி கொழும்பு வந்து சேர்ந்தேன். என் உடலில் ஏற்பட்ட காய வடுக்கள் மறைந்து போனாலும் போகலாம். ஆனால் இக்கொடிய புலிகளினால் என் நெஞ்சில் ஏற்பட்ட காயம் என்றுமே ஆறாது. ஆனால் காயம் பட்ட என் நெஞ்சுக்கு ஆறுதலாகவும், மனித நேயம் பேணப்பட நான செய்யும் சிறு பணியாகவும் கண்ணீருடன் இதை எழுதுகிறேன்.

1990 இன் ஆரம்பம், இலங்கையின் வடக்கு கிழக்கில் ஒரு அரசியல் மாற்றம் ஏற்படப்போகும் அறிகுறிகள் தென்படத் தொடங்கியது. காட்டுக்குள் இருந்த கொடிய மிருகங்கள் மெல்ல மெல்ல நாட்டுக்குள் ஊடுருவத் தொடங்கிய காலம். மனித நேயம் மீண்டும் மழுங்கடிக்கப்பட்டது. அடுத்து சில நாட்களில் தமக்கு விழப்போகும் அடிமை விலங்கைப்பற்றி உணரமுடியாத வட,கிழக்கு மக்களும் யாழ்ப்பாணபத்திரிகைகளும் புலிகளின் வரவை ஒரு வகையில் வரவேற்றனர். இந்நிலையில்தான் மாகாண அரசை ஆதரித்த தமிழ் மக்கள் மீது புலிகளின் பழிவாங்கல் நடவடிக்கைகள் தொடங்கின. மாற்று இயக்கத்தினருக்கு தலைவரால் பொது மன்னிப்பு அழிக்கப்பட்டுள்ளதாகவும் தம்மிடம் சரணடையும் படியும் ஒலிபெருக்கிகள் மூலம் தெருத் தெருவாக அறிவிக்கப்பட்டது. எங்கும் பரவலாகப் பலர் கைது செய்யப்படுவதாக அறியக்கூடியதாக இருந்தது. கைது செய்யப்படுபவர்கள் எங்கு கொண்டு செல்லப் படுகிறார்கள் என்பதோ அவர்களுக்கு என்ன நடக்கிறது என்பதோ யாருக்குமே தெரியாது. கைது செய்யப்படுபவர்களை பெற்றோரோ அல்லது உறவினர்களோ பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. தமிழீழமெங்கும் கொலைகார புலிகளின் கொடிய ஆட்சி ஆரம்பமாகியது. 1990 ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் புலிகள் வந்து தேடிக்கொண்டு போவதாக வீட்டில் சொன்னார்கள். மனம் துணுக்குற்றது. என்னவாக இருக்கும் என சந்தேகித்தபடியே அருகில் அமைந்திருந்த புலிகளின் குகை(முகாம்) நோக்கி சென்றேன்.

முன் காப்பரணில் சீருடையில் இருந்த சிறுவன் ஒருவன் என்னை யாரென விசாரித்தான். நான் மிகமிகப் பணிவாக வந்த காரணத்தைச் சொன்னேன். உடனே என்னை ஒரு திருடனைப் போல் பார்த்து என் உடல் எல்லாம் தடவிப்பார்த்து சோதித்து திருப்திப்பட்டவராக உள்ளே செல்ல அனுமதித்தார். அது ஒரு வழிப்பாதை என்பதும், இந்த வழியால் உள்ளே போனவர்கள் உயிருடன் திரும்புவதில்லை என்பதையும் முன்னர் நான் அறிந்திருந்ததால் மரணபயத்துடனேயே உள்ளே சென்றேன். அங்கே முகாம் பொறுப்பாளர் முன் போய் பவ்யமாக





படிப்பகம்

நின்றேன். அவர் எனது பெயர் முகவரி ஆகியவற்றை விசாரித்து விட்டு "உன்னை அழைக்கும்படி மேலிடத்திலிருந்து எமக்கு உத்தரவு வந்துள்ளது. அவர்கள் வந்துதான் உன்னை விசாரிப்பார்கள். அதுவரை இங்கு இரு எனக்கூறி ஒரு அறையினுள் விட்டுப் பூட்டினர். நேரம் இரவு பத்து மணி, அறை ஒரே இருட்டாக இருந்தது. சுமார் இரண்டு மணிநேரம் அப்படியே நின்றேன். பின்னர் சுவர் ஓரமாக உட்கார்ந்தேன். யோசித்துக்கொண்டேயிருந்து அப்படியே தூங்கிவிட்டேன். மறுநாள் காலை எட்டு மணிபோல் அறை திறக்கப்பட்டது. காலைக் கடன் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டேன். பின் மீண்டும் அறைக்குள் அடைக்கப்பட்டேன். நண்பகல் மதியச் சாப்பாடு தந்தார்கள். சாப்பிடவில்லை. சாப்பிடச் சொல்லி ஏசினார்கள் சிறிது சாப்பிட்டேன். இரவு ஒனபது மணிபோல் பாணும், வாழைப்பழமும் தந்தார்கள். சாப்பிட்டேன். சாப்பாடு கொண்டு வந்த சீருடைச் சிறுவனிடம் "அண்ணே என்னை எப்போ விடுவார்கள்" எனக் கேட்டேன். தெரியாது எனச் சொல்லி விட்டு கதவைப் பூட்டிக் கொண்டு சென்று விட்டார். இரவு முழுவதும் யோசித்துக் கொண்டிருந்தேன். பொழுது புலர்ந்தது. கதவு திறந்தது. காலைக் கடனை முடிப்பதற்கு அனுமதித்தார்கள். அந்த நேரத்தில் முகாம் பொறுப்பாளரைக் கண்டேன். என்னை எப்போ விடுவீர்கள்? என அழுது கொண்டே கேட்டேன், "தலைமைக் காரியாலயத்திலிருந்து இன்று இரவு ஆட்கள் வந்து உன்னை விசாரித்து பிரச்சனை இல்லை என்றால் உடன் விடுதலை செய்வார்கள்." என்றார். மனதுக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது. அன்றும் வழமைபோல் மதிய உணவும், இரவு உணவும் தரப்பட்டது. இரவு விசாரணைக்கு வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் தூக்கம் வராமல் விழித்திருந்தேன்.

நடுநிசி பன்னிரண்டு மணி இருக்கும். கதவு திறக்கப்பட்டு அறைக்கு வெளியே அழைக்கப்பட்டேன். கறுத்த தடித்த புலி ஒருவர் நின்றார். எனது பெயர் ஊர் எல்லாம் விசாரித்தார். E.P.R.L.F உடன் என்ன தொடர்பு எனக் கேட்டார். தொடர்பு ஏதுவுமே இல்லை என மறுத்தேன். மீண்டும், மீண்டும் அதையே கேட்டார். நான் இல்லை, இல்லை என மறுத்தேன். "டேய் சுத்துறியா?"(என்னை மடையனாக்குகின்றாயா?) எனக்கேட்டு அடிக்க வந்தார்.

"அண்ணே அடிக்காதீர்கள். எனக்கு இயக்கங்களுடன் தொடர்புகள் இல்லை. எனக்கு குடும்பப் பொறுப்பு அதிகம்," எனச் சொல்லி அழுதேன். "டேய்.....(கெட்டவார்த்தை) எல்லோரும் இப்படித்தானடா சுத்துகிறீர்கள். நீ E.P.R.L.F.க்கு றெக்கி(உளவு சொன்னது) கொடுத்து வந்தது எமக்கு தெரியும். பொய் சொல்லாதே," எனக் கூறினார். பின்னர் அங்கு நின்ற வேறு புலியைக் கூப்பிட்டு "இவனின் சேட்டைக் கழற்றி கண்ணைக் கட்டு" என்றார். அவ்விதமே செய்யப்பட்டேன். கைக்கு விலங்கிடப்பட்டேன். சிறிது நேரம் புலிகள் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள். என்னை இழுத்துச் சென்று ஒரு வாகனத்தில் ஏற்றினார்கள். வாகனம் எங்கு செல்கிறது என்பது தெரியாமல் வாகனத்தின் அடியில் குப்புற படுக்க வைக்கப்பட்டிருந்த நான்ஏதேதோ பயங்கர கற்பனையில் பயணப்பட்டுக்கொண்டிருந்தேன். இடைவழியில் வாகனம் நிறுததப்பட்டது. என்னை அழைத்துச் சென்றவர் வேறு யாருடனோ கதைப்பது கேட்டது. "யார் வானுக்குள் நல்ல கிடாய்" எனப் புதிய குரல் கேட்க " இதை சுடலையில் தட்டப்போகிறேன்", என என்னை அழைத்துச் சென்றவர் சொல்வது கேட்டது. எனக்கு மரண பயம் பிடித்துக் கொண்டது. தட்டப் போகிறேன் என்றால் அவர்கள் பாஷையில் சுடப்போகிறேன் என்று அர்த்தம். எனக்கு உடலெல்லாம் வியர்த்தது. சிறிது நேரத்தில் ஒன்றுமே தெரியாத நிலைக்கு நான் வந்து விட்டேன். வாகனம் எவ்வளவு நேரம் ஓடியது என்பதோ, எங்கு போகிறதென்பதோ எனக்கு எதுவும் தெரியவில்லை. வாகனத்தில் இருந்து இழுத்து இறக்கப்படும் போதுதான் சுய உணர்வு வந்தது.

நான் இப்போது ஒரு கும்மிருட்டான இடத்தில் நின்றிருந்தேன். அடர்த்தியான சோலை போன்ற உயர்ந்து வளர்ந்த மரங்கள். இருப்பத்தைந்து யார் தொலைவில் ஒரு பெரிய மாடி வீடு இருந்தது. அங்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அது ஒரு முகாம் என்பதை அறியக் கூடியதாக இருந்தது. அங்கிருந்த புலிகள் தூக்கக் கலக்கத்துடன் இருந்தார்கள். என்னை அழைத்து வந்தவர் அங்கிருந்த முகாம் பொறுப்பாளர் நசீர் என்பவரிடம் என்னை ஒப்படைத்தார். இரு படிவங்களை நசீரிடம் கொடுத்து "பிரச்சனை இல்லை. அடிக்க வேண்டாம்" என மெதுவாக கூறியது என் காதில் விழுந்தது. இது எனக்கு மன ஆறுதலைக் கொடுத்தது.

மேல் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஓர் அறைக்குள் தள்ளி விடப்பட்டேன்.. லைற் எரிந்து கொண்டிருந்தது. அறைக்குள் சுமார் இருபது பேர் வரை இருந்தார்கள். எல்லோரும் மிரண்டு போய் இருந்தார்கள். யாருமே எதுவுமே கதைக்கவில்லை. நான் ஓர் ஓரமாக உட்கார்ந்தேன். ஓரிருவர் படுத்திருந்தார்கள். மற்றவர்களுக்கு படுக்க இடமில்லை. நேரம் ஓடிக்கொண்டேயிருந்தது. பக்கத்திலிருந்த கைதியிடம் பேச்சு கொடுக்கலாமென்றால் அவன் தூங்கி வழிந்து கொண்டிருந்தான்.

எங்கோ தொலைவில் கோவில் மணி ஓசை கேட்டது. எனது பக்கத்துக் கைதி தூக்கம் கலைந்து எழுந்தார். "அண்ணே எப்போது எம்மை விடுவார்கள்" என கேட்டேன். அவர் கதைக்க வேண்டாம் எனவும் சைகை செய்து காட்டினார். நான் மௌனமானேன்.

கைது செய்யப்பட்ட நாலாவது நாள் பொழுது புலர்ந்தது. காலை ஒன்பது மணிபோல் நான் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறை திறக்கப்பட்டு வெளியே எல்லோரும் அழைக்கப்பட்டோம். முகம் கழுவுவதற்கும், சிறுநீர் கழிப்பதற்கும் அனுமதிக்கப்பட்டோம். எம்மை சூழ பல புலிகள் துப்பாக்கிகளுடன் காவல் நின்றார்கள். இப்போதும் கைவிலங்கு அகற்றப்படவில்லை. அங்கிருந்த எல்லா கைதிகளுக்கும் கைவிலங்கு போடப்பட்டிருந்தது. முகாமின் முன் முற்றத்தில் வரிசையாக நிறுத்தப்பட்டோம். அங்கு எல்லாமாக நாற்பது கைதிகள் இருந்தார்கள். எல்லோரும் முதல் நாள் இரவு அங்கு கொண்டுவரப்பட்டவர்கள் தான். நசீர் என்ற புலிகளின் முகாம் பொறுப்பாளர் வந்து ஒரு மேசையின் முன் அமர்ந்து கைதிகளை ஒவ்வொருவராக அழைத்து விசாரிக்கத் தொடங்கினார். எனது முறைவந்தது. எனது பெயர், முகவரி, தொழில் எல்லாம் கேட்டார். "டேய் உன்னை எதற்காக பிடித்தார்கள்" என கேட்டார். 'தெரியாது' என்றேன். "நீ சும்மா இருந்தால் ஏனடா பிடிக்கிறார்கள். என்ன செய்தனி, E.P.R.L.F. ஆதரவாளனா" எனக்கேட்டார். "நான் ஒரு இயக்கத்துக்கும் ஆதரவாளனல்லல" என்றேன். உடனே அவர் "நீ எல்லாம் ஏனடா தமிழனாய் பிறந்தாய் என" கூறி பெரிய ரீப்பை சட்டத்தால் அடித்தார். "நீ சுத்துறாய். (பொய் சொல்கின்றாய்) புலிப்படையை சாதாரணமாகவா நினைக்கிறாய். நீ சும்மா இருக்க உன்னை பிடிப்பதற்கு புலிப்படை ஒன்றும் முட்டாள்களல்ல, "எனக் கூறி மீண்டும் அடித்து முன்னைய அறையில் அடைத்தார்.

அன்று பகல் முழுவதும் ஒரு நேரச்சாப்பாடு மட்டுமே தரப்பட்டது. நான் முதன் முதல் முகாமுக்குப் போகும் போது அணிந்திருந்த நீட்டுக் காற்சட்டையுடன் மட்டுமே நின்றேன். எனது சேட் எங்கேயென்றே தெரியவில்லை. எம்மைப் பிடித்து இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றினார்கள். வாகனம் புறப்பட்டது. சிறிய வாகனமொன்றில் முப்பது கைதிகளும் ஏற்றப்பட்டிருந்தோம். மிருகங்களைக் கூட அப்படி அடைத்துக் கொண்டு செல்ல முடியாது. நாம் மிருகங்களிலும் கேவலமாக புலிப்படைக் கொடியவர்களால் அழைத்துச் செல்லப்பட்டோம்.

சுமார் நாற்பத்தைந்து நிமிடம் வாகனம் ஓடி நின்றதும் எல்லோரும்இறக்கப்பட்டோம். கண்கட்டப்பட்டிருந்தாலும் இருவரிருவராக விலங்கிடப்பட்டிருந்தாலும் ஒழுங்காக இறங்கமுடியவில்லை. அவர்கள் கூட்டிச் சென்ற பாதையால் நடக்கவும் முடியவில்லை. நான் இருதடவை விழுந்தேன். கண் கட்டுக்களை கழற்றி விட்டார்கள். ஒரு பழைய காலத்து பெரிய வீட்டின் பின் பக்கத்தில் நின்றோம். நிலத்தில் தலை குனிந்தபடி இருக்கும்படி பணிக்கப்பட்டோம். நசீர் தலமையில்தான் நாம் இந்த இடத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தோம். சாள்ஸ் என்ற முகாம் பொறுப்பாளர் அங்கு நின்றார். அவர் உதவியாளர் டில்கோ என்பவரும் உடனிருந்தார். சுமார் இருப்பத்தைந்து புலிகள் ஆயுதபாணிகளாக நின்றார்கள். கைதிகள் ஒவ்வொருவரினதும் தனித்தனி குற்றப்பத்திரங்கள் பொறுப்பாளர் சாள்சிடம் ஒப்படைக்கப்பட்டது. எம்மை ஒவ்வொருவராக அழைத்து குற்றப்பத்திரத்திலுள்ளவற்றைப் படித்து ஏளனமாகப் பார்த்து தூஷண வார்த்தைகளால் திட்டினார்கள். இப்படியாக ஒவ்வொருவராக அழைத்து விசாரித்துக் கேலி செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போது பொழுது விடிந்துவிட்டது.

விடிந்ததும் நாம் இருக்கும் இடத்தின் சூழல் தெரியத் தொடங்கியது. சுமார் மூன்று ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் பழைய காலத்து மாடிவீடு ஒன்று இருந்தது. காணியின் பின் கோடியில் ஒரு பெரிய ஓலைக் கொட்டிலும் மத்திமப் பகுதியில் ஒரு சிறு ஓலைக் கொட்டிலும் காணப்பட்டது. எங்கோ பாடசாலை ஒன்றிலிருந்து எடுத்து வரப்பட்ட மேசைகளும் கதிரைகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தன. காணியின் ஒரு கோடியில் மலம் கழிப்பதற்கு பாரிய கிடங்குகள் வெட்டப்பட்டு அவற்றின் மேல் தென்னங்குற்றிகள் போடப்பட்டிருந்தன. ஒரு பெரிய பாழடைந்த கிணறும் இருந்தது.

இப்புதிய சூழலில் எனது சிறை வாழ்க்கை ஆரம்பமாகியது. அங்கு சுமார் ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கைதிகள் ஒருவரோடு ஒருவர் கதைக்கக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு இருந்தது. அப்படி இருந்தும் எம்மை கண்காணிக்கும் புலிகள் கவனிக்காத நேரத்தில் எமது கவலைகளை பரிமாறிக் கொள்வோம். நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடம் முன்னாள் சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் நவரத்தினத்தின் சாவகச்சேரியிலுள்ள வீடு என்பது பின்னர் தெரிய வந்தது. அவ்வீட்டைச் சுற்றி நூற்றுக்கு மேற்பட்ட புலிகள் ஆயுதபாணிகளாக இரவு பகல் காவலிலீடுபடுத்தப்பட்டிருந்தனர். இங்கு எமது விலங்குகள் அகற்றப்பட்டன.

சாவகச்சேரி சாள்ஸ் முகாமுக்கு வந்த அடுத்த நாள் என்னிடம் இருந்த உடமைகள் எல்லாம் புலிகளினால் பறிமுதல் செய்யப்பட்டன. நான் கைது செய்யப்படும் போது என்னிடம் 1 பவுண் மோதிரம்

www.padippakam.com

ஒன்றும் பணமாக ரூபா எண்ணாயிரத்து முன்னூறும் இருந்தது. அத்துடன் எனது தேசிய அடையாள அட்டையும் இருந்தது. இவை எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன.

இம்முகாமில் இருந்த சுமார் ஆயிரம் கைதிகளில் பலருக்கு பொக்கிளிப்பான் நோய் கண்டிருந்தது. அவர்களை முகாமின் பின் கோடியில் அமைந்திருந்த ஓலைக் கொட்டிலில் காவல் வைப்பார்கள். அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாத காரணத்தால் பலருக்கு வாந்திபேதி நோய் ஏற்பட்டது. அவர்களுக்கு எவ்வித வைத்தியமும் இல்லை. மலசலம் கழிப்பதற்கு போதிய இடவசதி இல்லாததுடன் தண்ணி வசதியும் இல்லாததால் கைதிகளுக்கு சொறி, சிரங்கு, வாந்திபேதி என்பன இலகுவில் பரவ ஆரம்பித்தது. கைதிகள் நோயினால் பெரிதும் துன்புற்றார்கள்.

காலையில் முகம் கழுவ அனுமதிப்பார்கள். அதே நேரத்தில் மலமும் கழித்து முடித்துவிட வேண்டும். காலை ஆறு மணி முதல் ஏழு மணிக்கிடையில் எல்லா கைதிகளும் இந்த வேலைகளை முடித்துவட வேண்டும். சுமார் ஆயிரம் கைதிகள் காலைக்கடன் முடிப்பாதற்கு போதிய வசதி இல்லாத நிலையில் 1 மணி நேரத்தில் இது எப்படி சாத்தியமாகும். செய்யமுடியாதவர்கள் அடுத்த நாள் செய்யவேண்டும்.

காலை எட்டு மணிக்கு தேனீர் தருவார்கள். கைதிகளில் சிலர் தான் சமையல் செய்வார்கள். காலை பத்து மணிபோல் கௌபி சாப்பிடத் தருவார்கள். பின் மதியச்சாப்பாட்டுக்கும் இரவுச் சாப்பாட்டுக்கும் பதிலாக மாலை நாலு அல்லது ஐந்து மணி போல் சோறும் பருப்பு கறியும் தருவார்கள். கைதிகள் சாப்பிடுவதற்காக வாங்கும் சோறு சிறிதும் கொட்டக்கூடாது. அப்படி யாராவது குப்பையில் கொட்டியது கண்டு பிடிக்கப்பட்டால் கொட்டியவர் உண்மையை ஒத்துக் கொள்ளவேண்டும். அப்படி ஒத்துக்கொண்டால் அவருக்கு மூன்று நாட்களுக்கு சாப்பாடு இல்லை. ஒருவரும் ஒத்துக்கொள்ள வில்லையாயின் மறுநாள் ஒருவருக்கும் சாப்பாடு இருக்காது.

இங்கு விசாரணை என்ற பெயரில் ஏதேதோ நடக்கும். ஆரம்ப விசாரணை என்பார்கள். பூர்வாங்க விசாரணை என்பார்கள். ஒரு கைதி பற்றி தனிப்பட்ட முழுவிபரங்களும் எடுக்கப்படும். அத்துடன் பெற்றார், சகோதரர்கள் அனைவரினதும் விபரங்களும் பெறப்படும். குறிப்பிட்ட கைதியின் மீது குற்றப் பத்திரம் ஒன்று வைத்திருப்பார்கள். ஆனால் அதை சொல்ல மாட்டார்கள். நீ என்ன காரணத்துக்காக பிடிக்கப்பட்டாய் என கைதிகளையே கேட்பார்கள். சொல்லத் தெரியாத அப்பாவிக்கைதிகள் முழிப்பார்கள். விழும் அடி. விசாரணை செய்யும் போது கைதியின் கண்ணை கட்டி விடுவார்கள். எப்போ அடி விழும் என கைதிக்கு தெரியாது. அடிவிழும் போது கைதி துடிப்பார்.

சில கைதிகளை விசாரிக்கும் போது அவர்கள் மீது உள்ள குற்றச்சாட்டுக்களை நானும் அறியக் கூடியதாக இருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த முன்னாள் யாழ் மாவட்டசபை உறுப்பினரும், 1989 ஆண்டு பொதுத் தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டவருமான நடேசு என்பவர் எம்முடன் கைதியாக இருந்தார். அவர் மீது புலிகள் கூறும் குற்றம் என்னவெனில் வட்டுக்கோட்டைப் பகுதியில் தலைமறைவாக இயங்கி பல பொதுமக்களை கொலை செய்து வந்த தும்பன் என்ற புலியை இந்திய அமைதிப் படையினர் சுட்டுக்கொன்றனர். இதற்காக விருந்து வைத்துக் கொண்டாடினார் என்பதாகும். ஆனால் தான் அப்படி விருந்தொன்றும் வைக்கவில்லை என அவர் மறுத்தார்.

இன்னுமொரு கைதி ஸ்கந்தவரோதயா கல்லூரியின் உயர்தர மாணவன். இவரின் வீட்டில் இவர் துப்பாக்கியுடன் எடுத்த புகைப்படம் ஒன்று புலிகளால் கண்டெடுக்கப்பட்டது. அந்த படத்தில் உள்ள துப்பாக்கி எங்கே? அதை மறைத்து விட்டார் என்பதே குற்றச்சாட்டு. ஆனால் சம்பவம் பற்றி குறிப்பிட்ட கைதி அழுதபடி எனக்கு சொன்னார். துப்பாக்கியுடன் புகைப்படம் எடுக்கவேண்டுமென்ற ஆசையினால் ஒரு இயக்க நண்பரின் துப்பாக்கியை வாங்கி புகைப்படத்திற்கு நின்றாராம். அந்த புகைப்படம் புலிகளிடம் சிக்கியதால் தான் இப்போ சிறையிலிருக்கிறாராம்.

ஆனைக்கோட்டைச் சந்தியில் ஒரு அமைதியான குடும்பஸ்தருக்கு மூன்று வீடுகள் சொந்தமாக இருந்தது. அதில் இரு வீடுகளை அமைதிப்படையினர் பொறுப்பேற்று முகாமிட்டிருந்தனர். அவ்வீடுகளுக்குரிய மாதாந்த வாடகைப் பணத்தை இவர் பெற்று வந்துள்ளார். அந்த முகாமின் ஒரு பகுதியில் E.P.R.L.F. முகாமும் செயல்பட்டு வந்திருக்கிறது. இந்திய அமைதிப்படை வெளியேறிய போது முகாம் கைவிடப்பட்டது. அங்கு இருந்த காப்பரண்களுக்குப் பாவிக்கப்பட்ட கல், மண், இரும்புகள் போன்றவற்றை உழவு இயந்திரம் ஒன்றின் மூலம் வீட்டு உரிமையாளர் அகற்றியுள்ளார். சில நாட்களின் பின் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். E.P.R.L.F முகாமிலிருந்து ஆயுதங்கள் கடத்தி புதைத்து வைப்பதற்கு உதவியதாக குற்றஞ்சாட்டப்பட்டார்.

பண்டத்தரிப்பு சந்தியில் சிகை அலங்காரம் செய்யும் கடை வைத்திருந்த ஏழைத் தொழிலாளி ஒருவரும் எம்முடன் சிறையிலிருந்தார். இவரின் கடை பண்டத்தரிப்பு முகாமுக்கு மிக அருகில்



படிப்பகம்

இருந்தது. இவரிடம் சிகை அலங்காரம் செய்வதற்கு E.P.R.L.F. உறுப்பினர்கள் செல்வது வழக்கம். அந்த வகையால் அவர்களுடன் இவர் பழகியிருக்கிறார். முகாம் கைவிடப்பட்டதும் புலிகளினால் கைது செய்யப்பட்டு E.P.R.L.F.க்கு துப்பு கொடுத்து வந்ததாகவும் அவர்களுக்கு தனது வீட்டிலிருந்து உணவு கொண்டு சென்று கொடுத்தாகவும் குற்றம் சாட்டப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார்.

E.P.R.L.F. இயக்கம் காரைநகர் கடற்படை முகாம் மீது தாக்குதல் நடாத்தியபோது குருநகர் தொடர்மாடியில் இலங்கை இராணுவம் முகாமிட்டிருந்தது. இராணுவத்தை முகாமுக்குள் முடக்கும் நோக்கத்துடன் முகாமைச் சுற்றி கண்ணி வெடிகளை E.P.R.L.F. வெடித்துக்கொண்டிருந்த சமயம் பேணாட் என்னும் பொதுமகன் ஒருவர் கண்ணிவெடியில் அகப்பட்டு காலில் காயப்பட்டார் இச்சம்பவம் நடைபெற்று சில வருடங்களின் பின் புலிகளின் காட்டுத் தர்பாரின் போது பேணாட் என்பவர் கைது செய்யப்பட்டார். விசாரணையின் போது இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலினால் காயம் பட்டதாகப் பொய் கூறிவிட்டார். உண்மைச் சம்பவத்தை சொன்னால் தன்னையும் ஒரு E.P.R:L.F. உறுப்பினர் என தீர்மானித்து சுட்டுக்கொன்று விடுவார்களோ என்ற பயத்தில் பொய் கூறிவிட்டார். ஆனால் உண்மையில் விபத்து நடந்தது எப்படி என்பதை அறிந்திருந்த புலிகள் அவரை சுட்டுக் கொன்று விட்டார்கள். இது பற்றி அவரின் மனைவிக்கு சமீபத்தில் புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது. இயக்கங்களுடன் எவ்வித தொடர்புமில்லாத அப்பாவி பயத்தின் காரணமாக சிறியதோர் பொய் சொன்ன ஒரே காரணத்துக்காக புலிகளினால் ஈவிரக்கமின்றி கொலை செய்யப்பட்டு விட்டார்.

(தொடரும்)

*பொங்கல் வாழ்த்துக்கள் தோழர்களே*
*பொங்கல் வாழ்துக்கள் தோழியரே*

*வெண்பனி மீது பொன்மலர் சூடும்*
*செங்கதிரோனை வாழ்த்துகிறோம்*
*கண்பனி சூடி எம் நினைவோடு*
*ஏங்குமெம் தேசத்தை வாழ்த்துகிறோம்*

*பனைநிழல் வீழும் முற்றத்தில் நின்று*
*பாசத்தில் வாடும் நெஞ்சங்களே*
*பனியையும் மீறி பசுமையில் நிமிரும்*
*பைன்மரம் போன்ற சிங்கங்களே*

*பூமியில் என்றும் அகதிகள் என்று*
*புழுதிமண்போல சுழலுவதோ*
*தாயகம் மீண்டு துயர்களை வென்று*
*தலைநிமிர்ந்தே நாம் வாழுவதோ*

( நோர்வே : தை 1989 )

நன்றி:


அகதியின் பாடல் - வ.ஐ.ச.ஜெயபாலன்

www.padippakam.com

# மலையக பெண்கள் அபிவிருத்தி நிறுவனம்

" ...எமது ஸ்தாபனம் உழைக்கும் வர்க்க பெண்களை அடித்தளமாக கொண்ட சுயாதீனமான பெண்கள் அமைப்பொன்றை கட்டியெழுப்பும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தற்போது எமது ஸ்தாபனம் மலையகப் பெண்களை அறிவு மயப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. மலையகப் பெண்களை இலங்கையிலுள்ள ஏனைய சமூகப் பெண்களுக்கு சமமாக அபிவிருத்தி அடைய செய்வதினூடாக உலகப் பெண்களோடு இணைக்க முடியும் என நாம் கருதுகிறோம்.
புரட்சிகர அரசியல் கல்வியை பெண்களுக்கு புகட்டுவதன் மூலமே பெண்விடுதலைக்கு அடித்தளமிடமுடியும் என்பதில் உழைக்கும் வர்க்க பெண்களே பெண்விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகள் என்பதிலும் திட்டவட்டமாக உள்ளோம்....."


இந்த நிறுவனத்தின் புதுவருடக் கோரிக்கைகள்....



* பெண்களுக்கு ஆறு மணித்தியால வேலை
* தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளமும் சீருடைகளும்.
* தொழிற்சாலைகளில் பெண்களுக்கு இரவுநேர வேலை ஒழிக்கப்பட வேண்டும்.
* சர்வதேச மகளிர் தினம் சம்பளத்துடன்கூடிய விடுமுறை தினமாக்கப்பட வேண்டும்.
* தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகள், சுயாதீன அமைப்புக்களின் தீர்மானிக்கும்சபைகளில் சமபங்கு அளிக்கப்பட வேண்டும்.
* தோட்டதொழிலாளப் பெண்களை மேர்ப்பார்வையிட பெண்கள் நியமிக்கப்பட வேண்டும்.
* வேலை செய்யும் பெண்களின் குழந்தைகளைப் பராமரிக்கும் இடவசதிகள் செய்யப்பட வேண்டும்.
* பெண்களை இழிவுபடுத்தும் விளம்பரங்கள் தடை செய்யப்பட வேண்டும்.
* உயர் பதவிகளில் பெண்களுக்கும் சம பங்கு வேண்டும்.
* குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது நிறுத்தப்பட வேண்டும்.

மற்றைய பெண்கள் அமைப்புக்களுடனும் தொடர்பு கொள்ள விரும்பும் மலையக பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் முகவரி:

Chief Organiser
HILLCOUNTRY WOMEN'S DEVELOPMENT ORGANISATION
No. 12, Upper Dumburugiriya road,
HATTON, SRI LANKA.




## ஒரு அகதியின் பாடல்

- கவிதைத்தொகுப்பு - வ.ஐ.ச.ஜெயபாலன்

"...தான் வாழுகின்ற காலத்தின் நெருக்கடியை பல்வேறு தளங்களில் அனுபவித்த இக்கவிஞன் இன்று எங்களைப்போல் இன்னொரு நாட்டில் அகதியாக இருக்கின்றார். இந்த அகதியின் குரல் பல சமயங்களில் எங்களின் கேள்விகளையும், துயரங்களையும் சொல்லி நிற்கின்றது..."(பதிப்புரை)

வெளியிடுவோர்:
தேடல் பதிப்பகம்
556, Parliament Street,
Toronto, M4X1P8,
CANADA

SIN 3

படிப்பகம்